Registered as a News Paper in Sri Lanka

# கண்ணோட்டம்

කණ්ණොට්ටම් KANNOTTAM

ஒரு சமூகம்
போராடுவதென்பது.
பேரளிவுகளை
வழிபடுவதற்காக
அல்ல.
சுதந்திரமான
வாழ்வைப்பெற.

வெளியீடு 05 | 20 யூன் 2000 | ரூபா 10.00

# இந்தியாவின் தலைமையில் உலக நாடுகள்


இலங்கை விவகாரத்தில் ஆனையிறவின் பின்னர் உலக நாடுகளின் கவனம் அதிகரித்திருப்பது யாவரும் அறிந்ததே.

ஏற்கனவே முன்னெடுக்கப்பட்ட நோர்வேயின் சமாதான முயற்சிகள் இலங்கையின் ஆளும் பொ



துஜன முன்னணி, பிரதான எதிர் கட்சியான ஐ.தே.க, தமிழ் கட்சிகள், லண்டனிலுள்ள புலிகளின் அலுவலகம் என அபிப்பிராயங்கள் பெறப்பட்டன. தற்போது நோர்வேயின் வெளிவிவகார அமைச்சர் எரிக் சோல்ஹெய்ம் புதுடில்லியில் இந்திய தலைவர்களைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினார். தொடர்ந்து இந்தியாவுக்கு வருகை தந்த அமெரிக்க இராஜாங்க பிரதிச் செயலாளர் தோமஸ் பிக்கரிங்கும் புதுடில்லியில் இந்திய தலைவர்களுடன் இலங்கை நிலவரம் தொடர்பான பேச்சுவார்த்தைகளை நடாத்தினார்.

இவையெல்லாம் இந்தியாவின் அனுசரணையுடனேயே சர்வதேச சக்திகள் இலங்கை விவகாரத்தில் சம்பந்தப்பட விரும்புகின்றன என்பதையே உறுதிப்படுத்துகிறது. இலங்கையின் இன விவகாரத்தில் இந்தியாவின் பாத்திரத்தை ஐரோப்பிய யூனியனோ, அமெரிக்காவோ பகிரங்கமாக நிராகரிக்கத் தயாராக இல்லை.



இலங்கை இனவிவகாரம் புதுடில்லி வட்டாரங்களில் பலவித அபிப்பிராயங்களை உருவாக்கின. ஜவகர்லால் நேரு பல்கலைகழகத்தின் தென்னாசியவியல் துறையைச் சேர்ந்த பேராசிரியர் முனி போன்றவர்களும், பிரபல பத்திரிகையாளர்களான குல்திப் நாயர் போன்றவர்களும் இந்து பத்திரிகை ராம் போன்றவர்களும் இந்திய வெளிவிவகாரக்கொள்கை உள்நாட்டு அரசியலுக்காக பலியிடப் படக்கூடாது என்பதை வலியுறுத்தி உள்ளனர்.

முன்னாள் இந்திய இராணுவ லெப்டினன் ஜெனரல் கல்கட் போன்றவர்களும், பல இராஜதந்திரிகளும் 1987-1990 வரையிலான காலப்பகுதியில் ஏற்பட்ட கசப்பான அனுபவங்கள் கருத்திற்கெடுக்கப்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி இருக்கிறார்கள்.



முன்னாள் இலங்கைக்கான இந்தியத் தூதுவரும் வெளிவிவகாரச் செயலாளருமான ஜே.என் திக்ஷித் அவர்கள் 1990 இல் வலுவான ஒப்பந்தம் ஒன்று இருந்தது. அன்றைய ஜனாதிபதி பிரேமதாச அவர்கள் கோரியவுடன் இந்திய அமைதிகாப்புப்படையை வாபஸ் பெற்றது தவறு என்று உறுதிபடக் கூறியுள்ளார்.

இதற்கிடையே இலங்கைக்கு இந்திய இராணுவத்தை அனுப்பக் கூடாது என தமிழகத்தின் பொரும்பாலான கட்சிகள் அபிப்பிராயம் தெரிவித்துள்ளன.

இத்தனைக்கும் மத்தியில் கலைஞர் கருணாநிதி அவர்கள் மத்திய அரசின் வெளிவிவகாரக் கொள்கையில் தலையீடு செய்ய மாட்டேன் என்றும் புலிகள் மாற்று அரசியல் தலைவர்களை அழித்துள்ளார்கள் அவர்களை தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகளாக ஏற்றுக் கொள்ள முடியாதெனவும் தெரிவித்திருந்தார்.

இதற்கிடையில் வைகோ வின் மறுமலர்ச்சி தி.மு.க. ராமதாஸின் பாட்டாளி மக்கள் கட்சி, மற்றும் நெடுமாறன் போன்றவர்கள் இணைந்து சென்னையில் ஒரு பேரணியை நடத்த முற்பட்டார்கள். கலைஞரின் வேண்டுகோளையடுத்து அது கைவிடப்பட்டது.

இதற்கிடையே ஐக்கிய இலங்கைக்குள் பிரச்சினையைத் தீருங்கள். இல்லாவிடில் செக்; ஸ்லவாக் போன்று இரத்தம் சிந்தாமல் சமாதானமாக பிரிந்து விடுங்கள் எனத் தெரிவித்திருந்தார். இது இலங்கையிலும் இந்தியாவிலும் பல சர்ச்சைகளை ஏற்படுத்தியது.

இங்கு பிரிவினை ஏற்படுமானால் இந்தியா பால்கன் நாடுகள் போல் சிதறிவிடும் என இலங்கையின் தகவல் துறை அமைச்சர் மங்கள் சமரவீர தெரிவித்திருந்தார்.

அகில இந்திய, தமிழக அரசியல் கட்சிகள் குறிப்பாக காங்கிரஸ், இந்திய மார்க்சியக் கம்யூனிஸ்ட் கட்சி, தமிழக மாநில காங்கிரஸ், ராஜீவ் காங்கிரஸ் போன்ற கட்சிகள் கலைஞரின் இக்கூற்றை கடுமையாக விமர்சனம் செய்திருந்தன.

இந்தியாவில் முன்னணி பத்திரிகைகள் பலவும் இது இந்தியாவின் ராஜதந்திரத்திற்கு ஏற்பட்ட பலத்த சேதமென வியாக்கியானம் செய்திருந்தன.

தற்போது இனப்பிரச்சினை ஒரு நீர்சுழி போன்று கொழும்பு, புதுடில்லி, தமிழ்நாடு சுற்றிச் சுழன்று பலவிதமான அபிப்பிராயங்களை உருவாக்குகின்றன. எனவே இன்றைய நாட்கள் மிக முக்கியமானவை. சில சந்தர்ப்பங்களில் பிரச்சினை ஐரோப்பிய யூனியன், சர்வதேச மன்னிப்புச் சபை, ஐ.நா சபை என பல இடங்களில் அபிப்பிராயங்களை உருவாக்குகின்றன.

சீனா, ஜப்பான், தாய்லாந்து, பாகிஸ்தான், போன்ற நாடுகளும் இலங்கை தொடர்பாக தமது அபிப்பிராயங்களை தெரிவித்துள்ளன.

நீண்ட காலத்தின் பின் இலங்கைப்பிரச்சினை மீண்டும் சர்வதேச முக்கியத்துவத்தை பெற்றுள்ளது.

ஐக்கியப்பட்ட இலங்கைக்குள் அதிகாரப் பகிர்வு என்பதே பொரும்பாலான நாடுகளின் அபிப்பிராயமாக இருக்கிறது.

தொடர்ச்சி 2ம் பக்கம்

## திருமலையில் இருந்து இந்தியாவுக்கு !

திருமலை அலஸ் தோட்ட அகதி முகாமிலிருந்து மக்கள் இந்தியாவிற்கு இடம் பெயரத் தொடங்கியுள்ளார்கள்.

இந்தியாவில் அகதி முகாம்களில் பல வருடங்கள் இருந்தவர்கள் 1990 களின் நடுப்பகுதியில் நாடு திரும்பி அலஸ் தோட்டம் அகதி முகாமுக்கு வந்து சேர்ந்தனர். மீண்டும் இந்தியாவுக்கு இடம் பெயர்கின்றனர். சுமார் 50 பேர் வரை இவ்வாறு இடம் பெயர்ந்துள்ளனர்.

இது மிகப் பெரும் துயர வரலாறு. அகதி முகாமிலிருந்து அகதி முகாமிற்கு, மீண்டும் தமிழக அகதி முகாமுக்கு உயிராபத்திற்கு மத்தியில் இடம் பெயருவது என்ற மானிடப் பேரவலம் நிகழ்கிறது.

சொந்த இருப்பிடங்களில் தொழிலோடு இருந்த சிலர் பெறுமதியான மீன்பிடி உபகரணங்கள், வள்ளங்களை விற்று விட்டு இடம் பெயருகின்றனர்.

இவ்வாறு இடம் பெயருபவர்களிடம் ரூபா 5000 - ரூபா 10,000 வரை என பணம் அறவிடுகிறார்கள். தம்மை மக்கள் சேவகர்கள் என்று சொல்லும் ஒரு அரசியல் கட்சியின் சிதறுண்ட பிரிவினர். மரத்தால் விழுந்தவனை மாடேறி மிதித்த கதைதான்.

### கந்தளாய் பதட்டம்

மின் மாற்றிகள் தகர்ப்பு, கிளைமோர் தாக்குதல் மற்றும் ஸ்ரீ.ல.சு.க. அமைப்பாளர் மீதான தாக்குதல்களைத் தொடர்ந்து அப்பகுதியில் பதட்டம் நிலவுகின்றது.

எப்போதும் எதுவும் நிகழலாம் என்ற நிலை காணப்படுகின்றது. மக்களின் ஒரு பகுதியினர் அங்கு வாழ்வது பாதுகாப்பில்லை என உணர்கின்றனர்.

எப்போதுதான் இந்த பதட்டமும் அகதிகளாக அலைக்கழிவதும் ஒழியுமோ என்ற ஏக்கமே மக்கள் மனங்களில் எஞ்சி நிற்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருண்ட நாட்கள்

**1995** இன் பின்னர் இயல்பு வாழ்க்கைக்கு திரும்பிக் கொண்டிருந்த யாழ்ப்பாணம் திடீரென்று போர் மேகங்களால் சூழப்பட்டு இருள் சூழ்ந்து பேயுறையும் நகரம் போல் காட்சியளிக்கின்றது.

யாழ்ப்பாணம் தனது வரலாற்றில் தேடிய கீர்த்திகள் எல்லாவற்றையும் இழந்து, பொலிவிழந்து இன்னுமொரு அழிவை எதிர்நோக்கி நிற்கிறது. திரும்பத் திரும்ப யாழ்ப்பாணத்தின் ஒளிமிகு வாழ்க்கை அழிக்கப்பட்டு அது ஒரு களையிழந்த நெடுந்துயர் கொண்ட பிரதேசமாக காட்சியளிக்கிறது.

சில தசாப்தங்களுக்கு முன்னர் இலங்கையின் ஏனைய பகுதிகளுடன் மாத்திரமல்ல சர்வதேசங்களுடனும் உயிர்த்துடிப்புள்ள தொடர்பைக் கொண்டிருந்தது. கடந்த ஐந்து வருடங்களில் உள்ளகக் கட்டமைப்பு வசதிகள், படிப்படியாக அதிகரிக்கப்பட்டன. ஆனையிறவு முகாம் தாக்குதலுக்கு பின்னர் தொலைத் தொடர்பு வசதிகள் துண்டிக்கப்பட்டதோடு தற்போது பெற்றுக்கொண்டிருக்கும் மின்சாரம் உட்பட பல வசதிகளை இழந்து பின்னோக்கிச் செல்வதற்கான நிலைமை தலைதூக்கியுள்ளது.

விடுதலைப் போராட்டம் நடைபெறும்போது மின்சாரம், தொலைதொடர்பு, தொலைக்காட்சி போன்ற வசதிகளை தியாகம் செய்யத்தான் வேண்டுமென்று பத்திரிகையாளசிகாமணிகள் என்று கூறிக்கொள்ளும் சிலர் எழுதக்கூடும். இந்த நூற்றாண்டில் மிக மோசமான மாற்றங்கள் அன்றாட வாழ்க்கையில் நிகழ்ந்து கொண்டிருக்கும் இந்த யுகத்தில் மின்சாரம், தொலைபேசியின் இழப்பு பேரிழப்பே.

உலகம் பெற்றுள்ள பல பல விடயங்கள் யாழ்ப்பாண மக்களுக்கு மறுக்கப்பட்டுள்ளன. தமிழ்மக்களின் விடுதலையின் பேரால் புலிகளாலும், பயங்கரவாத செயல்களுக்கு பயன்படுமென்று அரச படையினராலும் பல விடயங்கள் தடை செய்யப்பட்டுள்ளன.

இந்த யுத்தச் சுமைகளினாலும், திரும்பத் திரும்ப நேர்ந்த அழிவுகளினாலும் யாழ்ப்பாணம் பல நூற்றாண்டுகள் பின் தள்ளப்பட்டதோடு சமூகத்தின் இருத்தலுக்கான உடல் ரீதியான, உள ரீதியான வலிமைகள் அழிக்கப்பட்டுள்ளன. தற்போது அவர்கள் இழப்பதற்கு எதுவுமற்ற மக்கள் கூட்டமாகவே 95இன் இடம் பெயர்வின் காயங்கள் ஆறுமுன்னர் புதிய இடம்பெயர்வைச் சந்தித்துள்ளார்கள். இடம்பெயர்வும் இப்போது வாழ்வின் பிரிக்கமுடியாத பகுதியாகிவிட்டது.

யுத்தவாதிகள் யுத்தம் உக்கிரம் பெறும் போதெல்லாம் அப்பிரதேசங்களில் மனிதர்கள் வாழ்கிறார்கள், அவர்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்பதைப்பற்றியெல்லாம் பெரிதாக சிந்திப்பதில்லை. இதற்கு புலிகளோ அரசோ விதிவிலக்கல்ல.

இங்கு கவலைகள் எல்லாம் யுத்தத்தில் ஈடுபடுபவர்களைப் பற்றி அல்லாமல் சாதாரண மக்களைப்பற்றியதாக இல்லை. எப்போதாவது மக்களைப்பற்றி, அதிகாரப்பரவலாக்களைப்பற்றி கூறுகிறார்களா? இந்த நிலை துரதிஷ்டமானதாகும். தற்போது உக்கிரமடைந்திருக்கும் யுத்த சூழ்நிலையில் யாழ் குடாநாட்டில் அகப்பட்டிருக்கும் ஐந்து இலட்சம் மக்கள் இதே நிலவரம் தொடரும் பட்சத்தில் மிக மோசமான நெருக்கடியை எதிர்நோக்குவார்கள். பட்டினி, நோய், பஞ்சம், பரவுவதற்கான வாய்ப்பு மிக மிக அதிகம்.

யாழ் குடாநாடு புலிகளின் கட்டுப்பாட்டினுள் வரும்போது ஏற்கனவே நிர்மாணிக்கப்பட்ட உள்ளக கட்டமைப்புக்கள் அழிந்து விடும். ஒரு மூடுண்ட, தனிமைப்படுத்தப்பட்ட நிலைமைகளில் மோசமான பொருளாதார தடையை எதிர்நோக்கும்.

இப்போது உடனடியாக பட்டினி மரணமும், புலிகளுக்கு மாற்று அபிப்பிராயம் உடையோர் படுகொலை செய்யப்படுவதற்குமான நிலைமைகள் அதிகரித்துள்ளன. பழிவாங்கும் நடவடிக்கைகள் பெரும் எடுப்பில் மேற்கொள்ளப்படலாம். ஜனநாயகமற்ற சூழ்நிலையையும், யுத்தத்தை வழிபடும் போக்கையும், வரிவசூல்களையும், தமது பிள்ளைகளை யுத்தத்தில் ஈடுபடுத்தப்படுவதையும், இருண்ட கடந்த காலத்தையும் மக்கள் அடியோடு வெறுக்கிறார்கள். அவர்கள் ஒரு சமாதானமான, அமைதியான, சமத்துவமான, கௌரவமான வாழ்க்கைக்காக ஏங்குகிறார்கள்.

இம்முறை திரும்பவும் அதே பழைய நிலைகளுக்கு யாழ்ப்பாணம் செல்லக்கூடிய சூழ் நிலை ஏற்படுமானால் பெருமளவு மக்கள் யாழ்ப்பாணத்தை விட்டு வெளியேறக்கூடும். அது லட்சத்தைத் தாண்டலாம்.

பாரம்பரிய பெருமையும், கல்விச் செழுமையும் பெற்ற யாழ்ப்பாணம், மக்கள் வாழமுடியாத நரகமாக மாறுவதை தமிழ் மக்களின் நலன் விரும்பும் எவரும் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள்.

மக்களின் நிலை இப்படியிருக்க இந்தியாவிடமோ, வேறு நாடுகளிடமோ யுத்தத்தை தீவிரப்படுத்துவதற்கான கோரிக்கைகளே விடுப்பட்டுள்ளன. உலகின் ஜனநாயகம், மனித உரிமைகளை மதிக்கும் எந்த நாடும் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு, சமாதானம், மனிதாபிமான உதவி என்ற அடிப்படையிலேயே உதவி செய்ய முன்வரும்.

இனப்பிரச்சினை தீர்வுக்கு நோர்வே, அனுசரணையாளராக செயற்பட முன்வந்தது. தற்போது இந்தியாவும் மத்தியஸ்தம் வகிக்க தயார் என்கிறது. மனிதாபிமான உதவிகளையும் வழங்கத்தயார் என்கிறது.

இத்தகைய சூழ்நிலையில் உதவும் கரத்தை பற்றிப்பிடிப்பதுதான் முறை அல்லாமல் யுத்தத்திற்கு மாத்திரம் உதவிசெய்யவேண்டும் வேறு எதிலும் சம்பந்தப்படக்கூடாது என்றால் எந்த நாடுதான் உதவமுன்வரும். இந்திய அரசு, புலிகள் இருதரப்பினரும் கேட்டுக்கொண்டால் மத்தியஸ்தம் வகிக்க தயார் என்றும், அதேபோல் மனிதாபிமான உதவிகளை வழங்க தயார் எனவும் அறிவித்திருந்தது.

ஆனால் இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் கதிர்காமரோ இந்தியா தனது உதவிகள் பற்றி உத்தியோகபூர்வமாக எதையும் அறிவிக்கவில்லையென்று குறைப்பட்டுக்கொள்கிறார். அதுவும் யாரும் அனுசரனையாளராக செயற்படலாமே தவிர மத்தியஸ்தராக செயற்பட முடியாது என்கிறார். இவையெல்லாம் இனப்பிரச்சினை தொடர்பான இதயசுத்தியான நோக்கங்கள் இருக்கின்றனவா என்ற பலத்த சந்தேகத்தை எழுப்புகின்றன.

யுத்தத்தை தீவிரமாக நடத்துவதற்கு சர்வதேச ஆதரவு தேவைப்படுகிறது. ஆனால் இனப்பிரச்சினை தீர்வுக்கு அத்தகைய சர்வதேச ஆதரவு வேண்டப்படாததாகிறது. எனவே அதிகாரப்பரவலாக்கலைவிட யுத்தத்தில் வெல்வதென்பதே முதன்மை பெற்றவிடயமாக இருக்கிறது. அதிகாரப்பகிர்வு தொடர்பான பேச்சுவார்த்தையை ஐ.தே.கவுடனான கலந்துரையாடலுடன் மட்டுப்படுத்தவே விரும்புகிறார்கள். யுத்தத்திற்கு கனதியையும், அதிகாரப்பகிர்வுக்கு இலேசான முக்கியத்துவத்தையும் கொடுக்கவே விரும்புகின்றார்கள்.

இன்று இந்த நாட்டில் நடக்கும் பிரச்சினைகள் எல்லாமே இந்த அரசியல் தீர்வு விடயத்தைச் சுற்றியே இயங்குகின்றன. யுத்தம் இல்லாத காலத்திலும் சரி, யுத்தம் உருவாகி அதன் குரூரம் களைகட்டிக்கொண்டிருக்கும் காலத்திலும் சரி அரசியல் தீர்வில் வெளிப்படையான தன்மை



இல்லாமல் இருப்பது. நொண்டிச் சாட்டுக்கள் சொல்வது என்ற போக்கே காணப்படுகிறது. இது இந்த நாட்டில் பேரினவாதம் எவ்வாறு தளமிட்டுள்ளது என்பதையே கோடிட்டுக் காட்டுகிறது.

முதலில் இந்த நாட்டில் சகல இன மக்களும் சமத்துவமாக வாழ வேண்டும் என்பதை இதயத்தின் அடியாளத்தில் இருந்து சிந்திக்க வேண்டும். செய்ய வேண்டும். ஜனாதிபதி அவர்களும் இதிலிருந்து விலகமாட்டார் என எதிர்பார்க்கிறோம். ஏனெனில் அதிகாரம் பகிர்ந்தளிக்கப்படும் என்று முதன் முதலில் கூறியவர் அவர். இலங்கையின் பிரதேச ஒருமைப்பாட்டை பாதுகாத்துக்கொண்டு அதிகாரம் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் என்றே இந்தியாவும் கூறுகிறது.

எனவே பரந்த நோக்கத்துடன் பிரச்சினையை அணுகுவதே முறையாகும். தொலைக்காட்சிகளில் பல்லைக்கடிக்கும் பிக்குகளையும், யுத்த முழக்கமிடும் பேர்வழிகளுக்கும், விளம்பரம் கொடுப்பதை நிறுத்த வேண்டும். அதிகாரப்பகிர்வும் நடக்கக்கூடாது மற்றைய சமூகங்கள் அனைத்தும் பௌத்த, சிங்கள மேலாதிக்கத்துக்கு அடிப்பணிந்து வாழவேண்டும், உலகம் முழுவதும் அந்த மேலாதிக்க உணர்வுக்கு ஆதரவு வழங்க வேண்டும் என்று எதிர்பார்த்தால் அது மிகப்பரிதாபகரமான, முட்டாள்தனமான முயற்சியாகும்.

சர்வதேச அளவில், பரந்திருக்கும் தமிழ் சமூகம் புலிகளின் ஜனநாயக விரோத எதேச்சதிகாரத்தையோ, யுத்தவாத ஆட்சியையோ, ஆதரிக்கப்போவதில்லை.

இதனை விளங்கிக் கொள்வதிலேயே பல்லின இலங்கை பாதுகாக்கப்படும். மாறாக பௌத்த சிங்கள இனவாதத்திற்கு வழங்கப்படும் இறைமை என்ற சதிகார வார்த்தை ஒருபோதும் ஒத்துக்கொள்ளப்படபோவதில்லை.

**சி. திருநாவுக்கரசு**

# இந்தியாவின் தலை..........

01ம் பக்கம் தொடர்ச்சி

இந்தியாவினுள் வெவ்வேறு அபிப்பிராயங்களுக்கு அந்த நாட்டின் ஜனநாயகத்தினுள் இடமிருக்கிறது. ஆனால் இந்தியாவின் நிலைப்பாடு என்பது ஐக்கியஇலங்கைக்குள் அதிகாரப் பகிர்வே.

சர்வதேச சமூகம் இந்தியாவுடன் இணைந்தே இலங்கை விவகாரத்தில் செயற்பட விரும்புகின்றது என்பதை நிகழ்வுகள் தெளிவாக உணர்த்துகின்றன.

எமது நாட்டின் பிரச்சினைகூட இந்திய உப கண்டத்தின் பிரச்சினையே. இங்கு நிகழும் யுத்தமும் ஏனைய அரசியல் ரீதியான முக்கியமான விடயங்களும் இந்தியாவில் எதிரொலிக்கவே செய்யும்.

தமிழ் மக்களுக்கு தமிழகத்துடனான மொழி, கலாச்சார, பாரம்பரிய ரீதியான தொடர்புகளும் முக்கியமானவை. இலங்கையில் ஏற்படும் தீவிரமான அரசியல், யுத்த மாறுதல்கள் இந்தியாவினுள்ளும் தாக்கத்தை விளைவிக்கும்.

பல்வேறு கருத்துக்கள் செயற்பாடுகள் இருந்தாலும் ஐக்கிய இலங்கைக்குள் உச்சபட்ச தீர்வு என்பதே இந்தியாவின் நிலைப்பாடு.

ஆனையிறவு தாக்குதலுக்குப் பின் மனிதாபிமான உதவிகளை செய்யத் தயாராக இருப்பதாகக் கூறிய இந்தியா தற்போது இலங்கையின் இனப்பிரச்சினை தீர்வில், அதிகாரப் பகிர்வில் மத்தியஸ்தம் செய்யத் தயாராக இருப்பதாக வெளிப்படையாகவே கூறியுள்ளது.

மயிலே மயிலே என்றால் இறகு போடாது என்ற நிலையிலேயே சிங்கள அரசியல் தலைமைத்துவங்கள் இருக்கின்றன.

பொதுஜன முன்னனியும், ஐ.தே.க உம் திர்வு யோசனைகள் தொடர்பாக பேசத் தொடங்கி எவ்வளவு காலமாகி விட்டது. ஆனால் இன்னும் அது அடிமுடி காணாத விடயமாகத்தான் நீண்டுக் கொண்டு போகிறது.

இதற்கிடையில் யாழ்ப்பான யுத்த நிலவரம், தென்னிலங்கையில் நடைபெறும் தற்கொலைக் குண்டுத் தாக்குதல்கள் அடுத்து என்னவும் நிகழலாம் என்ற நிலையைத் தோற்றுவித்துள்ளன.

யாழ்ப்பாண நிலவரமும், கொழும்புக் குண்டு தாக்குதல்களும் முன்னெப்போதும் இல்லாத அளவிற்குச் சர்வதேச கவனத்தை ஈர்த்துள்ளன.

கொழும்பில் கைத்தொழில் அமைச்சர் சி.வி. குணரட்ன மீதான தாக்குதல்கள் ஐ.நா செயலாளர் நாயகம் உட்பட பல நாடுகள் கண்டித்துள்ளன. கலாநிதி நீலனின் படுகொலையும் இவ்வாறானதொரு கண்டனத்திற்குள்ளானது குறிப்பிடத்தக்கது. இத்தகைய தாக்குதல்கள் பதற்றத்தை அதிகரிக்கும் சாத்தியம் காணப்படுகிறது.

இத்தகைய சூழ் நிலையில் தான் இந்தியாவின் வெளிவிவகார அமைச்சர் ஜஸ்வந்சிங் அவர்கள் இலங்கை வந்தார். அவர் எதற்காக இலங்கை வந்தார் என்ற கேள்விகளும், பல்வேறு ஊகங்களும் எழுப்பப்படினும் அவர் இலங்கையுடனான நீண்டகால நட்புறவு, இலங்கையில் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதில் இந்தியா உதவத் தயாராக இருப்பது எல்லாவற்றையும் உணர்த்துவதாகவே அவரின் விஜயம் அமைந்துள்ளது.

எவர் என்னதான் கூறினாலும் இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் முன்னணி வகிக்கப்போகும் நாடு இந்தியாதான். இந்தியாவின் தலைமையிலேயே சர்வதேச சமூகம் அணிதிரளுகிறது என்பதே உண்மையாகும். இதனை இலங்கையின் அரசியல் சமூக சக்திகள் புரிந்துக் கொண்டு செயற்பட வேண்டும்


## தோழர்களே, நண்பர்களே, வாசகர்களே!

**அபிப்பிராயங்கள், விமர்சனங்கள், ஆலோசனைகளையும், ஆக்கங்களையும் கண்ணோட்டம் வரவேற்கிறது.**
**அனைத்து நேரடித் தொடர்புகளுக்கும்:**

37/2, 1/1, Wimalasara Road,
Kalubowila, Dehiwala.

E.P.I.C., Box No: 95,
95144, Garges Les,
Gonnesse Cedex,
France.

E.P.I.C., Box No: 1231
70797 Kornwestheim
Germany.

B.M. Box No: 1738,
London - Wcix - 3NN,
U.K.

P - Fach No: 506,
Bern - 17,
Switzerland.

P - Box No: 7183,
Arumpakkam,
Chennai - 106,
India.

310 ஆஸ்பத்திரி வீதி
யாழ்ப்பாணம்.
☎ 021 2022

29A, வாவிக்கரை வீதி-1
மட்டக்களப்பு.
☎ 065 25669

No: 1/1 நெவில் வீதி
திருகோணமலை.
☎ 026 24221

B30, யூ.சி. குவாட்டஸ்
குருமண் காடு,
வவுனியா.
☎ 024 23102

சென் செபஸ்த்தியார் வீதி
மன்னார்.
☎ 023 32370

மின் அஞ்சல் முகவரி (E-Mail Addresses)
epiclondon@gn.apc.org - London


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# ஆனையிறவு தாக்குதலின் பின்னான தென்னிலங்கை அரசியல்

ஆனையிறவு முகாம் புலிகள் வசம் ஆனதன் பின் தென்னிலங்கையில் ஆச்சரியப்படத்தக்க பல முன்னுக்கு பின் முரணான கருத்துக்கள் வெளிவரத்தொடங்கின. (The Island) பத்திரிகை தனது இனவாதத்தை தேசபக்தியாக காட்டிக்கொண்டது. யுத்தத்தில் படைதரப்பு அல்லது புலிகள் முன்னேறுவதும் பின்வாங்குவதும் சாதாரண விடயங்கள். ஆனால் இங்கு மிக நீண்டகாலமாக இருந்து வந்த ஆனையிறவுமுகாம் தாக்குதலுக்கு உள்ளானதும் பரபரப்பு அதிகரித்தது.

(The Island) பத்திரிகை இந்தியாவிடம் உதவி கோருங்கள் இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் அடிப்படையிலும் அதற்கான ஒப்பந்த ரீதியான உரிமை உண்டு. அவர்கள் உதவாவிட்டால் பாகிஸ்தான், இஸ்ரேல், எமது நீண்டகால நட்பு நாடான சீனா, புலிகளை தடை செய்திருக்கும் அமெரிக்கா போன்ற எல்லா இடமும் கேளுங்கள் என்று ஓரளவு இந்தியாவை உதாசீனப்படுத்தியும் எழுதியது.



இந்த (The Island) பத்திரிகையில் இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் அடிப்படையிலான அதிகாரப் பரவலாக்கல் எப்போதும் வரவேற்கப்பட்டதோ அங்கீகரிக்கப்பட்டதோ இல்லை. அதிகாரப்பரவலாக்கலுக்கு எதிராகவே அது எழுதி வந்திருக்கிறது.

அதே போல் ஆனையிறவு முகாம் தாக்குதலுக்கு சில வாரங்களுக்கு முன் நோர்வேயின் சமாதான முயற்சிகளுக்கு எதிராக பிக்குகளும் பிரபல பௌத்த சிங்கள அமைப்புக்களும் இனவாத கோஷங்களுடன் ஆர்ப்பாட்ட ஊர்வலமொன்றை நடத்தி அந்த நாட்டின் இறைமையையும் கௌரவத்தையும் இழிவுபடுத்தும் விதமாக அதன் தேசிய கொடியையும். எரித்தார்கள். அதனை படம் பிடித்த பி.பி.சி சந்தேசிய சிங்கள சேவையின் நிருபரும் தாக்கப்பட்டார்.

இதை ஏன் இங்கு குறிப்பிடுகிறேன் என்றால் அதிகாரப்பகிர்வின் மூலம் பிரச்சினைகளை தீர்க்கும் முயற்சியை ஆவேசத்துடன் எதிர்க்கும் இவர்கள் யுத்தத்தில் ஏற்பட்ட ஒரு பின்னடைவை அடுத்து இந்தியா வரவேண்டும் என்கிறார்கள். இவர்களுடைய அர்த்தத்தில் இந்தியா வருவது யுத்தத்திற்கு உதவ மாத்திரம்தான் இதனோடு தொடர்புடைய அரசியல் விவகாரங்கள் எவற்றையும் இந்தியா பேசக்கூடாது. அதாவது பொதுவான நியாயத்தின் அடிப்படையில் அல்லாமல் தங்களுடைய தேவைகளுக்காக மாத்திரம் தலையிடவேண்டும் என்றே இவர்கள் எதிர்பார்க்கிறார்கள்.

ஒரு காலத்தில் இந்தியா தமிழர்களுக்கு மாத்திரம் ஆதரவான நாடு என்றும் இங்கு வாழும் வடக்கு-கிழக்கு, மலையக தமிழர்களை இந்தியாவின் ஏஜென்டுகள் என்றும் சொல்லி இனவாத பிரச்சாரங்களை மேற்கொண்டு வந்தவர்கள் இவர்கள்.

இந்திய-இலங்கை ஒப்பந்தத்தை அமுல்படுத்த வந்த இந்திய அமைதி காக்கும் படையை நாட்டைவிட்டு வெளியேற்றுமாறு கோஷமிட்டவர்கள் இவர்கள். ஜே.வி.பியினரும் பிரேமதாசாவும் இவர்களுக்கு தென்னிலங்கையில் துணை போனார்கள். பிரேமதாசா தலைமையிலான அரசே இந்திய படையை வெளியேறுமாறு கோரியிருந்தது.

மிகவும் சங்கடமான நிலையில் அவமானங்களுக்கு உட்படுத்தப்பட்டே இந்திய அமைதி காக்கும் படை வெளியேற வேண்டிய நிலை இருந்தது. தமது முட்டாள் தனங்கள் எல்லாவற்றையும் மறந்துவிட்டு இப்போது இந்தியாவை வருமாறு அழைக்கிறார்கள். இவர்கள். அழைக்கும் போது வரவும் போகச் சொல்லும் போது வெளியேறவும் ஒன்றும் இந்தியா இவர்களுடைய குற்றேவலாளி அல்ல.

இந்தியா பிராந்தியத்தில் மிகப் பெரிய பல இன மத மொழி மக்களைக் கொண்ட மதச்சார்பற்ற நாடு. இந்தியா உலகில் பல்வேறு நாடுகளின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதில் தார்மீக ரீதியில் ஒத்துழைப்பு வழங்கி இருக்கிறது.

உள்நாட்டில் எழுந்த பிரிவினை அதிகாரப்பரவலாக்கல் கோரிக்கைகளுக்கு ஏனைய மூன்றாம் உலக நாடுகளுடன் ஒப்பீட்டளவில் முறையாகத்தீர்வு கண்ட நாடு! தென்னாபிரிக்கா, பாலஸ்தீனம் மற்றும் பல்வேறு ஆபிரிக்க நாடுகளின் சுதந்திர போராட்டங்களுக்கு ஆதரவளித்த நாடு! இலங்கையின் இனப்பிரச்சினைக்கு ஐக்கியப்பட்ட இலங்கைக்குள் தீர்வு காண்பதற்கு உதவ வந்த நாடு!.

ஆனால் தாம் எல்லோருமாக சேற்றை அள்ளி வீசியதை மறந்து தற்போது இந்தியா வரவேண்டும் என்பதில்தான் இவர்களுடைய பெரும் குழப்பத்தை நாம் அவதானிக்க முடியும். இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு கண்டு யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வருவதற்கு இந்தியா வருவதென்றால் அது இவர்களுக்கு வேப்பங்காயாக கசக்கிறது. அங்குதான் பிரச்சினையே இருக்கிறது.

இவர்கள் ஒன்றை விளங்கிக் கொள்ளல் வேண்டும். இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு, சமாதானம், என்று இல்லாமல் எந்த நாடும் அல்லது எந்த சர்வதேச ஸ்தாபனமும் ஐ.நா உட்பட தலையிட முன் வரும் என்று கருதுவார்களானால் இவர்களிடம் சர்வதேசியம் பற்றி எந்தவிதமான அறிவு பூர்வமான கருத்தும் இல்லை என்பதையே அது பிரதிபலிக்கும். யுத்தம் இனப்பிரச்சினை தீர்வை தவிர்த்து இந்த நாட்டில் சகல இன மக்களும் சமத்துவமாக வாழ்வதற்கான அடிப்படைகளை நிராகரித்து இந்த நாட்டிற்கு ஒரு இறைமை பிரதேச ஒருமைப்பாடு இருப்பதாக இவர்கள் கருதுவார்களானால் அது ஒரு பௌத்த சிங்கள நோக்கிலான கற்பிதமே தவிர யதார்த்தம் அல்ல. இந்த உண்மை எப்போது தென்னிலங்கை அரசியல் அரங்கில் புலப்படுகிறதோ அப்போதுதான இந்த நாடு சிக்கலில் இருந்து விடுபடுவதற்கான முதல் அடியை எடுத்து வைக்கும்.

ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்கா அவர்களும் இடதுசாரி அரசியல் கட்சிகளும் சில அரச சார்பற்ற நிறுவனங்களைக் சேர்ந்தோரும் பிரதான எதிர் கட்சியை சேர்ந்த ஒரு சிலரும் இந்த உண்மையை விளங்கியிருக்கக்கூடும்.

ஆனால் அதிகாரப்பரவலாக்கல் தொடர்பான பேச்சுவார்த்தைகள் இனிமேலும் பொதுஜன முன்னணி பிரதான எதிர் கட்சி என்ற வட்டத்தினுள் சுழலாமல் சர்வதேச அளவிலும் முன் கொண்டு செல்லப்பட வேண்டும்.


நோர்வே இனப்பிரச்சினை தீர்வுக்கு ஒத்துழைக்க முன் வந்தது தற்போது புதுடில்லியில் இந்திய அரசுடன் நோர்வேயின் வெளிவிவகார அமைச்சர் இது தொடர்பாக பேச்சு வார்த்தைகளை நடத்தியுள்ளார். இனப்பிரச்சினை தீர்வில்

**குருச்சந்திரா**

இந்தியாவின் இன்றியமையாமையை அவர் வெளிப்படையாகவே தெரிவித்துள்ளார். இத்தகைய சூழ்நிலையில் இலங்கையும் தனது பங்கிற்கான அக்கறையை செலுத்தியாக வேண்டும்.

சர்வதேச சமூகம் இலங்கைக்கு ஆதரவளிப்பதும் அளிக்காமல் விடுவதும் இந்தத் தீர்வில் காட்டும் இதய சுத்தியான அக்கறையிலேயே தங்கியிருக்கிறது.

ஒரு எளிமையான உண்மை இருபது வருட யுத்தத்தின் பின்னரும் இருந்துக் கொண்டு இருக்கிறது. தீர்வு ஒன்று முன்வைக்கப்படவில்லை என்பதே அது. அதனை சம்பந்தப்பட்டவர்கள் சிந்தித்தால் அது நாட்டுக்கும் நாட்டின் எதிர்காலத்திற்கும் நன்மை பயக்கும். இல்லையேல் நாம் எவரும் விரும்பாத விளைவுகயையே இந்த நாடு சந்திக்கும். ●



## இரங்கல்

கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் சி.வி. குணரட்ணா இன, மத பேதங்களைக் கடந்து மக்களுக்குச் சேவையாற்ற வேண்டும் என்ற எண்ணத்துடன், ஈடுபாட்டுடன் செயற்பட்டவர்.

தனது பாரம்பரியத்திற்குக் கிடைத்த மத கலாச்சார விழுமியங்களை பேணியவர். இன வாத வீராவேச பேச்சுக்களை [illegible]

கொழும்பு தெற்கு பகுதிகளான தெகிவளை, இரத்மலான, கல்கிசை, மொரட்டுவை பகுதிகளில் மக்கள் மத்தியில் அபிமானம் பெற்றவர்.

ஸ்ரீ.ல.சு.க. தொழிற்சங்கத்திலும் செயற்பட்டவர். தொழிலாளர் நல உரிமைகளுக்காகப் பாடுபட்டவர்.

நற்பண்புகளும் அரசியல் நாகரீகமும் கொண்ட சி.வி ஐ அழி

த்ததன் மூலம் எதை சாதிக்க முயல்கிறார்கள்

ஆத்திர உணர்வுகளை கிளறி இன வன்முறைகளை ஏற்படுத்துவதுதான் இத் தாக்குதலின் நோக்கமாகத் தெரிகிறது. இது தென்னிலங்கையில் வாழும் தமிழ் மக்கள் பற்றி என்ன நினைக்கிறார்கள் என்பதை தெளிவுப் படுத்துகிறது.

அண்ணாரின் மறைவுக்கு ஈ.பி.ஆர்.எல்.எப். தனது இரங்கலை தெரிவித்துக் கொள்கிறது. ○

## அஞ்சலி

நவரட்ணராஜா (றொபட்) மட்டகளப்பு ஆரையம்பதியில் ஜனநாயக விரோதப் படுகொலைக்குள்ளான நவரடணராஜா (றொபட்) அவர்களின மறைவிற்கு ஈ.பி.ஆர்.எல்.எப் தனது ஆழ்ந்த அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்கிறது.

மாறுபட்ட அபிப்பிராயங்களுக்காக சகோதரர்களைக் கொல்லும் ஜனநாயக விரோதச் செயற்பாடு இன்றுவரை தொடர் கதையாகத்தான் இருக்கிறது. இந்த ஜனநாயக விரோதச் செயற்பாடுகள் எப்போது முடிவுக்கு வருகின்றனவோ அன்றுதான் எமது சமூகத்திற்கு விமோசனம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனைத்துக் கட்சி மாநாட்டில் எமது நிலைப்பாடு

ராஜபண்டிதர்

இலங்கையின் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா அவர்கள் யாழ்ப்பாணக் குடா நாட்டில் ஏற்பட்டுள்ள இராணுவ நெருக்கடிகள் பற்றி அனைத்துக் கட்சிகளுக்கும் விளக்குமுகமாக கடந்த 15-05-2000 திகதியில் அனைத்துக் கட்சிகளினதும் பிரதிநிதிகள் கூட்டம் ஒன்றைக் கூட்டினார். அக்கூட்டம் ஜனாதிபதியின் செயலகமாக செயற்பட்டுக் கொண்டிருக்கும் பழைய பாராளுமன்றக் கட்டிடத்தில் நடைபெற்றது. அக் கூட்டத்தில் இருபத்தேழு (27)கட்சிகள் கலந்துக் கொண்டன என்று அரசாங்கம் தெரிவிக்கின்றது.

இக்கூட்டத்தில் தலைமை வகித்து உரையாற்றிய ஜனாதிபதி அவர்கள் யாழ்ப்பாணத்தில் தற்போது நிலவும் இராணுவ நிலவரங்கள் பற்றி மேலோட்டமாக கூறியதுடன் அரச படையினர் புலிகளுக்கு எதிராக உறுதியாக நின்று போரிடுவதாகவும் அவர்களுக்கு வேண்டிய ஆட்பலமும் ஆயுத பலமும் அனுப்பி வைக்கப்படுவதாகவும், அத்துடன் வெகு விரைவில் ஆயுத உதவிகள் வெளிநாடுகளில் இருந்து பெறப்படும் என்றும் கூறினார்.

மாநாட்டில் பல்வேறு கட்சிகளினதும் பிரதிநிதிகள் தத்தமது கருத்துக்களை முன் வைத்ததுடன் ஜனாதிபதியை நோக்கி கேள்விகளையும் எழுப்பினர். ஒருவர் யுத்த நிறுத்தத்தைக் கொண்டு வந்து புலிகளுடன் பேச்சு வார்த்தை நடத்த வேண்டும் என்றார். இன்னொருவர் இந்திய அரசாங்கத்தின் மத்தியஸ்தத்தை ஏன் ஏற்கவில்லை என்று கேள்வி எழுப்பினார்.



மற்றொருவர் அரச விமானங்கள் யாழ்ப்பான மக்கள் மீது குண்டு போடக்கூடாது என்றார். இன்னும் ஒருவர் எப்படியாயினும் என்ன செய்தாயினும் தமிழ் பயங்கரவாதத்தை ஒழித்துக் கட்ட வேண்டும் என்று சிங்கம் போல் உறுமினார். வேறு ஒரு கட்சித் தலைவர் மாநாட்டில் பங்கு பற்றும் அனைத்துக் கட்சிகளும் பயங்கரவாதத்திற்கு எதிராகவும் பிரிவினைவாதத்திற்கு எதிராகவும் இம் மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றி பிரகடனப்படுத்த வேண்டும் என்றார். ஒவ்வொரு கேள்விக்களுக்கும் கருத்துக்களுக்கும் தெளிவாகவும் உறுதியாகவும் ஜனாதிபதி பதிலளித்தார்.

மக்கள் முன்னணி அரசாங்கம் பதவிக்கு வந்து ஒன்பதே நாட்களில் புலிகளுடன் பேச்சுவார்த்தையை நடத்தியதாகவும் சுமார் ஒன்பது மாதங்கள் பேச்சுவார்த்தைகள் நடாத்தி காலம் கடத்திய புலிகள் அரசியல் தீர்வு பற்றி பேசுவதற்கு முன்வராமல் தாங்களே பேச்சு வார்த்தையை முறித்துக் கொண்டு மீண்டும் யுத்தத்தை ஆரம்பித்தார்கள் என்று ஜனாதிபதி நினைவுப்படுத்தினார்.

புலிகளுடன் யுத்த நிறுத்தத்திற்காகவும் பேச்சுவார்த்தைக்காகவும் முயற்சித்தமையையும் குறிப்பிட்டார். இப்பொழுதும் அரசாங்கம் புலிகளுடன் அரசியல் தீர்வு பற்றி பேசுவதற்கு தயாராக இருப்பதாகவும் யாராயினும் புலிகளை அவ்வாறான பேச்சுவார்த்தைக்கு அழைத்துவரும் அதிசயத்தைச் செய்யமுடியுமாயின் அரசாங்கம் யுத்த நிறுதத்திற்கும் பேச்சுவார்த்தைக்கும் தயாராக இருக்கிறதென வலியுறுத்தினார்.

யாழ்ப்பாணத்தில் விமானத் தாக்குதல் பற்றி குறிப்பிடுகையில் அரச விமானங்கள் புலிகளின் தளங்கள் மீது தாக்குவதாகவும் அப்பகுதிகளில் மக்கள் இல்லையென்றும், ஆனால் புலிகள்தான் மக்கள் நெருக்கமாக வாழும் பகுதிகளை நோக்கி தாக்குதல் மேற்கொள்வதாகவும் சுட்டிகாட்டினார். இந்தியாவின் மத்தியஸ்த்தம் பற்றிக் குறிப்பிட்ட ஜனாதிபதி இந்தியாவின் அந்த நிலைப்பாடு தொடர்பாக எந்த விதமான செய்தியையும் இந்திய அரசாங்கம் இலங்கை அரசாங்கத்திற்கு தெரிவிக்கவில்லை என்றும் குறிப்பிட்டார்.

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் சார்பில் பங்கு பற்றிய தோழர் வரதராஜபெருமாள் அந்த மாநாட்டில் இறுதிப் பேச்சாளராக இன்றைய நிலைமைகளோடு ஒட்டி தமது கருத்துக்களை முன் வைத்தார். குறிப்பாக இந்தியாவின் மத்தியஸ்த்தம், அரசியல் தீர்வுத் திட்டம், அரசபடைகளின் சோதனைகளால் மக்கள் படும் வேதனைகள் பற்றியும் சுருக்கமாக ஆனால் உறுதியாக தமது கருத்துக்களை தெரிவித்தார்.

இந்தியாவின் மத்தியஸ்த்துவத்தை உடனடியாக இலங்கை அரசாங்கம் கோர வேண்டும் என்றும் இந்திய அரசாங்கம் உத்தியோக பூர்வமாக தகவல் அறிவிக்க வேண்டும் என்று எதிர் பார்ப்பதையும் அவ்வாறான ஒரு தகவலுக்காக காத்திருப்பதையும் விட்டு விட்டு இலங்கை அரசாங்கம் இந்திய மத்தியஸ்தத்தை உடனடியாக கோரவேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

நோயாளிதான் வைத்தியனை தேடிப் போக வேண்டுமே தவிர வைத்தியனுக்காக நோயாளி காத்திருக்க கூடாது இங்கு நோய் எம்மைத்தான் பிடித்திருக்கிறது. நாம் தான் நோயாளிகள். இந்தியாவின் உதவியை கோரவேண்டியது நாங்களேதான் என்று வலியுறுத்தினார்.

அரசியல் தீர்வு பற்றிக் கூறுகையில் புலிகளின் பயங்கரவாதம் என்று சொல்லுவதா, அல்லது தமிழர்களின் பயங்கரவாதம் என்று சொல்லுவதா? புலிகளின் செயல்கள் பயங்கரவாதமா அல்லது விடுதலைப் போராட்டமா என்பதைப்பற்றிய ஆராய்ச்சிக்காக இந்த மாநாடு கூட்டப்படவில்லை. புலிகளின் பயங்கரவாதத்திற்கும் தமிழர்களின் பயங்கரவாதத்திற்கும் விடுதலை போராட்டத்திற்கும் எல்லைகளைக் கண்டு கொள்கின்ற முயற்சிகளுக்காக இந்தக் கூட்டம் கூட்டப்படவில்லை என்று கூறிய தோழர் வரதராஜபெருமாள் இந்த நாட்டில் இவ்வாறான பிரச்சினைகளுக்கு தீர்வு என்ன என்பதை கண்டறிவதில்தான் நாம் மக்களைச் செலுத்த வேண்டும். யுத்த நிறுத்தம் என்பது ஒரு அரசியல் தீர்வு ஆகாது.

இந்த யுத்தத்தை முற்றுமுழுதாக முடிவுக்கு கொண்டு வருவதற்கு அரசியல் தீர்வு என்ன அதனை எப்படி நடைமுறைப்படுத்துவது என்பதிலேயே நாம் கவனம் செலுத்துதல் வேண்டும். சரியான அரசியல் தீர்வு எட்டப்படாதவரை நடைமுறைப்படுத்தப்படாதவரை இந்த பயங்கரவாத வன்முறை நடவடிக்கைகள் என்பனவற்றை முடிவுக்கு கொண்டு வரமுடியாது.

மேலும் கூறுகையில் ஜனாதிபதி அவர்கள் தமது அரசியல் தீர்வு பெட்டகத்தின் மீது கொண்டுள்ள ஈடுபாடும் அக்கறையும் சந்தேகங்களுக்கு இடமற்றதொன்றாகும். ஆனால் இதனை அவர் பிரேரித்து ஐந்தரை வருடங்கள் ஆகிவிட்டன. இன்னமும் அத்திட்டம் சட்டமாக்கப்படும் என் [illegible]

ஜனாதிபதி தேர்தல் முடிந்ததும் அத்திட்டம் பாராளுமன்றத்தில் முன் வைக்கப்படும் என்று எதிர்ப் பார்த்தோம் ஆனால் தேர்தலின். பின்னர் அத்தீர்வுத் திட்டம் அனைத்துக் கட்சிகளுடனும் கலந்துரையாடுவதற்கான ஒரு விடயமாக மாறியது. முதலில் அரசாங்கத்திலுள்ள கட்சிகளுக்கிடையே கலந்துரையாடல், பாராளுமன்றத்திலுள்ள தமிழ் கட்சிகளுடன் கலந்துரையாடல்கள், ஐக்கிய தேசிய கட்சியுடன் கலந்துரையாடல்கள் என மாதங்கள்தான் கடந்துக் கொண்டிருக்கின்றதே தவிர கலந்துரையாடல்கள் ஒரு முடிவுக்கு வருவதாக தெரியவில்லை.

புதிய அரசியல் யாப்புப்பெட்டகத்தில் உள்ள பல முக்கியமான விடயங்கள் இன்னமும் தமிழ் கட்சிகளுடனோடு பேசப்பட்டு இணக்கம் காணப்படவில்லை. இந்த நிலையில் எப்பொழுது புதிய அரசியல்யாப்பு பாராளுமன்றத்திற்கு முன் வைக்கப்படும், எப்பொழுது அது சட்டமாக்கப்படும், எப்பொழுது அது நடைமுறைக்கு கொண்டு வரப்படும் என்கின்ற கேள்விகளுக்கு விடைகள் கிடைக்காமல் அவை சந்தேகங்களை மட்டுமே எழுப்புகின்றன என்றார்.

எனவே மேன்மை தங்கிய ஜனாதிபதி அவர்கள் காலதாமதமின்றி முன்னர் குறித்த கால எல்லைக்குள் நடாத்த வேண்டிய கலந்துரையாடல்களை விரைவாக முடித்து தீர்வு திட்ட யோசனைகளை சட்டமாக்கி நடைமுறைப்படுத்த தேவையான நடவடிக்கைகளை மேற் கொள்ள வேண்டும் என்றார்.

முடிவில் பதிலளித்த ஜனாதிபதி அவர்கள் என்ன நடந்தாலும், யார் எதனை ஏற்றுக் கொண்டாலும், ஏற்றுக் கொள்ளாவிட்டாலும் குறித்த காலத் தவணைப்படி தீர்வுத்திட்டம் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படும், நடைமுறைப் படுத்தப்படும் என உறுதிபட தெரிவித்தார்.

தோழர் வரதராஜபெருமாள் தமது பேச்சில் கடைசியாக தமிழ் மக்களுக்கு பாஸ் வழங்கும் நடைமுறைகள், கொழும்பில் பொலிஸ் பதிவுகள் என்பன வற்றால் தமிழ் மக்கள் படுகின்ற தொல்லைகளையும் அதனால் ஏற்படுகின்ற மன வேதனைகளையும் பற்றி எடுத்துரைத்தார். அவர் அங்கு கூறுகையில் வவுனியா, மன்னார் மாவட்டங்களில் இருந்து தமிழ் மக்கள் கொழும்புக்கு வருவது என்றாலோ அல்லது ஏனைய மாவட்டங்களில் இருந்து அந்த மாவட்டங்களுக்கு போவது என்றாலோ அனுமதிப் பத்திரம் பெற வேண்டியுள்ளது. அந்த மாவட்டத்தில் வசிப்பவர்களுக்கு பல்வேறுபட்ட அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்படுகின்றன.

அதே போல் கொழும்பில் வாழும் தமிழர்களும், கொழும்புக்கு வரும் தமிழர்களும் அவர்கள் கொழும்பில் வசிக்கும் பகுதிகளில் உள்ள பொலிஸ் நிலையங்களில் பதிவு செய்து அப் பதிவு பத்திரங்களை வைத்திருக்க வேண்டும் என நடைமுறை உள்ளது இந்த அனுமதிப் பத்திரங்கள் பதிவுப் பத்திரங்கள் நடைமுறையானது தமிழ் மக்களை இன ரீதியாக பாரபட்சப்படுத்துகின்ற, ஒரு மக்கள் சமூகத்தை மொத்தமாக தொல்லைக்கு உள்ளாக்கப்படுகின்ற விடயமாகவே பெரும்பாலானவர்களால் உணரப்படுகின்றது.

புலிகளின் போக்குவரத்துக்களை கட்டுப்படுத்துவதற்கான, தடுத்து நிறுத்துவதற்கான பாதுகாப்பு நடவடிக்கைகளை நாம் நிராகரிக்கவில்லை. ஆனால் அந்த நடவடிக்கைகள் ஒரு சமூகத்தை இன ரீதியாக தொல்லைப்படுத்துவதைத்தான் இல்லாமல் செய்தல் வேண்டும். இந்த அனுமதி பத்திரங்களோ பதிவுப் பத்திரங்களோ நடைமுறையில் புலிகளின் நடமாட்டத்தையோ, கொழும்புக்கு வருவதையோ போவதையோ கொழும்பில் இருப்பதையோ செயல்படுவதையோ நடைமுறையில் சிறிய அளவிலும் கட்டுப்படுத்துவதாக இல்லை தடைப்படுத்துவதாகவும். இல்லை. எந்தப் பத்திரம் வேண்டும் என்றாலும் லஞ்சப்பணம் கொடுத்து பெற்றுக் கொள்ளக் கூடியதாகவே உள்ளது.

புலிகளுக்கு பணம் ஒரு பிரச்சினை அல்ல. உலகில் பில் கேட்டுக்கு அடுத்ததாக பண வருமானம் கொண்டவர்கள் இந்தப் புலிகள். எனவே அவர்கள் பணத்தை கொடுத்து எந்தப் பத்திரத்தையும் பெற்றுக் கொள்கிறார்கள். இந்த துறைகளால் தொல்லைப் படுவோர்கள் சாதாரண அப்பாவி பொது மக்களே. இந்தப் பத்திரங்கள் மறுபக்கம் ஊழலை வளர்த்து விடுவனவாக உள்ளன.

எனவே அரசாங்கம் சாதாரண அப்பாவி தமிழ் மக்களுக்கு தொல்லைத் தராமல் துன்பம் தராமல் இருக்கும் வகையான பாதுகாப்பு முன் எச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என வலியுறுத்தினார். ●

> இந்தியாவின் மத்தியஸ்த்துவத்தை உடனடியாக இலங்கை அரசாங்கம் கோர வேண்டும் என்றும் இந்திய அரசாங்கம் உத்தியோக பூர்வமாக தகவல் அறிவிக்க வேண்டும் என்று எதிர பார்ப்பதையும் அவ்வாறான ஒரு தகவலுக்காக காத்திருப்பதையும் விட்டு விட்டு இலங்கை அரசாங்கம் இந்திய மத்தியஸ்தத்தை உடனடியாக கோரவேண்டும் என்றும் குறிப்பிட்டார்.
>
> நோயாளிதான் வைத்தியனை தேடிப்போக வேண்டுமே தவிர வைத்தியனுக்காக நோயாளி காத்திருக்க கூடாது இங்கு நோய் எம்மைத்தான் பிடித்திருக்கிறது. நாம் தான் நோயாளிகள். இந்தியாவின் உதவியை கோரவேண்டியது நாங்களேதான் என்று வலியுறுத்தினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யுத்தமும் அகதி மக்களும்

யுத்தம் முன்னெப்போதையும் விட முக்கியத்துவத்தைப் பெற்று விட்டதால் இந்த யுத்தத்தினால் இடம்பெயர்ந்தவர்கள் திரிசங்கு சொர்க்க நிலைக்கு தள்ளப்பட்டுள்ளார்கள்.

வவுனியாவின் பதின்மூன்று நலன்புரி நிலையங்களிலும், மன்னார், பேசாலை நலன்புரி நிலையத்திலும், திருமலை கண்ணாடி தொழிற்சாலை, அம்பாறையின் திருக்கோயில் அகதிமுகாம்களில் வாழும் மக்கள் நிச்சயமற்ற எதிர்காலத்தை நோக்கி ஏங்கியபடி வாழ்கிறார்கள். இந்த முகாம்கள் அரசின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளினுள் வருபவை. தவிர 1990 இல் யாழ்ப்பாணத்தில் இருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லீம் மக்களின் பெரும்பகுதியினர் புத்தளத்திலும், அனுராதபுரம், குருநாகல், கொழும்பு ஆகிய இடங்களில் சிதறுண்ட நிலையிலும் வாழ்கிறார்கள்.

கடந்த வருடத்தின் இறுதிப் பகுதியிலிருந்து யுத்தம் தீவிரமடைந்துள்ள அண்மைக்காலம் வரை மக்கள் ஏதோவொரு. வகையில் இடம் பெயர்ந்து கொண்டு தான் இருக்கிறார்கள். கடந்த வருடம் புலிகள் ஒட்டிசுட்டான், மாங்குளம் பகுதிகளை தாக்கி படை முகாம்களை கைப்பற்றியதையடுத்து வவுனியா அரச கட்டுப்பாட்டுப்பகுதியில் வசித்த மக்களை இராசேந்திரம்குளம் பகுதிக்கு இடம்பெயர்ந்து செல்லுமாறு அறிவித்தார்கள். இந்த அறிவித்தல் வந்து ஒரு சிலமணி நேரங்களில் மக்கள் இடம்பெயரத் தொடங்கினார்கள்.

பின்னர் யாழ் குடாநாட்டில் தனங்கிளப்பு பகுதி மக்களையும் தொடர்ந்து பளை பிரதேசத்தையும் அதனை அண்டிய கிராமங்களையும் விட்டு மக்களை வெளியேற நிர்ப்பந்தித்தார்கள்.

1995இல் அரச படைகளின் சூரியக்கதிர் நடவடிக்கைகளையடுத்து ஒரு சில மணி நேரத்தில் மக்களை வலிகாமத்தை விட்டு வெளியேறுமாறு ஒலிபெருக்கி மூலம் அறிவித்ததோடு பல இடங்களில் வற்புறுத்தல்களும் செய்தார்கள். இது வடகிழக்கின் சரித்திரத்தில் மிகப்பாரிய இடம் பெயர்வாக இருந்தது. வலிகாமத்திலிருந்து தென்மராட்சிக்கு சென்றவர்களை வன்னிக்குச் செல்லுமாறு பணித்தார்கள்.



ஆனால் குடாநாட்டை அரசபடைகள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்ததன் பின் மக்கள் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பிச் சென்றார்கள். பலருடைய வீடுகள் சூறையாடப்பட்டிருந்தன. இன்னும் பலருடைய வீடுகள் நிர்மூலம் செய்யப்பட்டிருந்தன. பல இடங்களில் கண்ணிவெடிகள் புதைக்கப்பட்டிருந்தன.

கிளாலி தாண்டி வன்னிக்கு சென்றவர்களோ இன்னும் துயரமான நிலையை அடைந்தார்கள். புதிதாக குடிசை அமைத்து, புதிதாக வாழ்க்கையை ஆரம்பிக்க வேண்டியிருந்தது. பலர் மடு அகதிமுகாம்களில் தஞ்சம் புகுந்தார்கள். யாழ்ப்பாணத்துக்கான பாதை திறப்புபோர் வன்னியில் உக்கிரம் பெற்றபோது இவர்கள் மீண்டும் இழப்புக்களை சந்தித்தார்கள்.

மன்னார் வீதி உயிலங்குளம் பகுதியில் சண்டைகள் அதிகரித்தபோது மடுமுகாமிலும் அதனை அண்டிய பகுதிகளிலும் இருந்தவர்கள் பாதிக்கப்பட்டார்கள். ஒருவாறு தப்பிப்பிழைத்து வவுனியா அரச கட்டுப்பாட்டிலுள்ள பகுதியினுள் வந்தவர்களில் பெரும்பான்மையானோர் பலர் இன்னமும் முகாம்களிலேயே முடங்கிக்கிடக்கின்றார்கள். அவர்கள் நடமாடுவதற்கு வெளியில் சென்றுவருவதற்குக் கட்டுப்பாடுகளும் உண்டு. உறவினர்கள், நண்பர்களை உடையவர்கள் அவர்களிடம் சென்றார்கள்.

வெளிநாட்டில் இருந்து உதவிப்பெறக்கூடிய வாய்ப்புக்களை உடையோரும் வசதியான உற்றார் உறவினர்களைக் கொண்டிருந்தவர்களும் ஓரளவு பொருள் வசதிபடைத்தோரும். கொழும்பிலும் வவுனியாவிலும் தமது வாழ்வை ஓரளவு தக்கவைக்க முடிந்தது. இன்னுமொரு பகுதியினர் வெளிநாடுகளுக்கு தங்கள் பிள்ளைகளை அனுப்பிவைத்தார்கள். இன்னுமொரு பகுதியினர் தமிழ்நாட்டின் அகதிமுகாம்களில் தஞ்சம் புகுந்தார்கள். இந்த மண்ணை நம்பி வாழ்ந்தவர்கள் தமது கிராமத்துக்குச் செல்லும் நாளை எண்ணி தவமிருக்கின்றார்கள். திருமலையில் கப்பலுக்காக காத்திருப்பதும், உண்ணாவிரதம் இருப்பதும் எதுவித முக்கியத்துவமுமற்றுப் போன சாதாரண நிகழ்ச்சி.

1995இல் யாழ்குடா நாட்டிலிருந்து இடம் பெயர்ந்தவர்கள் இன்னும் சொந்த இடத்திற்கு திரும்பாத நிலையில் அங்கு தற்போது புதிய இடம்பெயர்வு நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. பீரங்கித் தாக்குதல்களில் சிறுவர்கள் உட்பட பலர் மரணித்துள்ளார்கள்.

வடக்கு கிழக்கில் ஒரு தொழிலை ஆரம்பிப்பது பற்றியோ ஒரு வீட்டைக் கட்டுவது பற்றியோ நினைக்கும் நிலையில் பெரும்பாலானவர்கள் இல்லை. எப்போது பீரங்கிகளின் செல்கள் வீழ்ந்து வெடிக்கும் எப்போது மரணம் குடிகொள்ளும் எப்போது இடம் பெயர்வு நிகழும் என்ற பீதியே எங்கும் ஆக்கிரமித்திருக்கிறது.

எந்த இடமும் வாழ்வதற்குரிய பாதுகாப்பான நிலைமையை கொண்டிருக்கவில்லை. தொழில்கள் அத்தனையும் ஸ்தம்பிதமடைந்துள்ளன. மீன்பிடி, விவசாயம் ஆகிய ஜீவாதாரத் தொழில்கள் பல்வேறு கட்டுப்பாடுகள் உயிர் ஆபத்தை ஏற்படுத்தும் அபாயம், வரி வசூல் ஆகியவற்றால் தேய்வடைந்துள்ளன. மனிதர்களின் மனங்களில் நம்பிக்கைகள் அருகிவிட்டன



இந்த வடக்கு-கிழக்குப் பிரதேசம் எமது தொடர்ந்த இருப்புக்கு பிரயோசனமற்றது என்ற நிலையை தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

புதுவருட தினத்தன்று திருகோணமலை மக்சைகர் விளையாட்டு அரங்கில் நடைபெற்ற இசை நிகழ்ச்சியில் நடைபெற்ற குண்டுவெடிப்பும், வைகாசி விசாகத்தில் மட்டக்களப்பு நகர பௌத்த விகாரைக்கு அண்மையில் இடம்பெற்ற குண்டு வெடிப்பும் இதேபோன்று மக்கள் செறிந்துள்ள இடங்களில் நடைபெறும் பீரங்கி சண்டைகளும், துப்பாக்கிச் சமரும் இதற்கிடையே பல பொதுமக்கள் இறந்து போவதற்கான நிலைமைகளைத் தோற்றுவித்துள்ளன. வாழ்வின் சகல அம்சங்கள் மீதும் வன்முறை, பயங்கரத்தின் சுவடுகள் பதிந்துள்ளன.

அது தலைநகரம் வரை, தலைநகரவீதிகள், பேருந்துக்கள் வரை, விஸ்வரூபம் பெற்றுள்ளது. மக்களின் இருப்பிடங்கள் ஒரு தடவையல்ல பல தடவை அழிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு இடம்பெயர்வின்போதும் பல நூற்றுக்கணக்கான மனித உயிர்கள் காவுகொள்ளப்பட்டுள்ளன. இயல்பு வாழ்க்கை என்பது நொறுங்குண்ட, கற்குவியலாக மாறியுள்ளது. புனர்வாழ்வு, புனரமைப்பு, நடவடிக்கைகள் இங்கு அர்த்தமற்றுப் போய் விட்டன. கண்ணுக்கெட்டிய தூரம் வரை [illegible] மேகங்களே [illegible]



தற்போது யாழ்ப்பாணத்து மனிதனின் மனநிலையை ஒரு கணம் சிந்திப்போமானால் அது பாரிய மன அதிர்வை ஏற்படுத்துவதாக இருக்கும். பல இரவுகளும், பகல்களும் இங்கு இழக்கப்படுகின்றன. பாடசாலைகள், வெறிச்சோடி விடுகின்றன. ஆலயங்கள் பாழடைந்துவிடுகின்றன. வீட்டு வளர்ப்பு மிருகங்கள் ஏற்கனவே பழக்கப்பட்ட இந்த பயங்கர சூழலையிட்டு மருட்சியடைகின்றன.

வாழ்க்கை எவ்வளவு பெறுமதியானது இங்கு மனித வாழ்க்கைக்கு ஒரு பெறுமானமும் இல்லை. தேடல்கள், நம்பிக்கைகள், சர்வநாசம் செய்யப்படுகின்றன. இக் காலங்களில் மனிதன் பல யுகங்களைக்கடந்து மூப்படைந்து விடுகின்றான்.

யுத்தத்தின் அடுத்த கட்டத்தில் தான் ஏதோவொரு விதத்தில் கொல்லப்படலாம். என எண்ணி தனது ஒரேயொரு சொத்தான உயிரைக்கையில் பிடித்துக்கொண்டு ஓடிக்கொண்டிருக்கின்றான்.

யுத்தம் புரிபவர்கள் மாத்திரம் என்ன! அங்கு வெறும், இறந்தவர்களின் எண்ணிக்கைகள் மாத்திரம்தான் மிஞ்சுகின்றன?

சபிக்கப்பட்ட தேசம் போல் காட்சியளிக்கும் எமது பிரதேசங்களில் எங்காவது ஓரிடத்தில் நம்பிக்கை சுடர்விட வேண்டும் இலங்கையின் அரசியல், மனித உரிமை, ஜனநாயக சக்திகள் இந்த நம்பிக்கை சுடரொளியை ஏற்றுவதற்கு சர்வதேச சமூகத்தின் உதவியை கோர வேண்டும். அதுவே இன்று முதலும் முக்கியமுமான பணி! இல்லையேல் ஒரு பரந்து விரிந்த சுடுகாடு உருவாகுவதை நாம் கையாலாகாதவர்களாகப் பார்த்துக்கொண்டிருப்போம்

—எஸ்.தி. சிறி—

இந்த இருபது வருடங்களும் யுத்தம் பேச்சுவார்த்தை, மரணம், அகதி மக்கள் என்ற சொற்களை கேட்டுக்கேட்டு உணர்வுகள் மரத்துவிட்டன. எனவே மீள முடியாத அழிவிலிருந்து மனிதத்தை பாதுகாக்க சகல முயற்சிகளும் மேற்கொள்ளப்படவேண்டும்.

### பிந்திய செய்தி

யுத்தத்தின் பிடியிலிருந்து தப்புவதற்காக யாழ் குடா நாட்டின் தென்மராட்சி பகுதியிலிருந்தும், யாழ் நகரை அண்டிய பகுதிகளிலிருந்தும் வலிகாமம் கிழக்குப் பகுதியிலிருந்தும் பல்லாயிரக்கணக்கான மக்கள் இடம் பெயர்ந்துள்ளனர். தென்மராட்சியின் சில பகுதிகளில் மக்கள் உயிரிழந்துள்ளனர். எங்கே இடம் பெயர்ந்து செல்வது என்ற தடுமாற்றமும், ஒரு முட்டுச் சந்தில் விடப்பட்டது போன்ற அவலமும் காணப்படுகின்றது.

# வைகாசி விசா..........

12ம் பக்கம் தொடர்ச்சி

மான உணர்வுகள் தூண்டப்பட்டு அவை பேயாட்டம் போடாதா என்பதே இவர்களின் அங்கலாய்ப்பாகும்.

அதிஷ்டவசமாக இந்த நாட்டின் பல்வேறு இன மக்கள் மத்தியிலும் இனவாத எண்ணங்களைவிட சமாதானத்திற்கான சகவாழ்வுக்கான எண்ணங்களே அதிகமாகக் காணப்படுகின்றன. எந்தக் குறுகிய பேரினவாத சக்திகளின் நோக்கங்களுக்கும் இரையாவதற்கு நாட்டின் பெரும்பான்மையான, நாகரீகமான மக்கள் தயாராக இல்லை இவை ஒன்றையொன்று சார்ந்து இயங்கும் தமிழ் சிங்கள இனவாத சக்திகளுக்கு பலத்த அடியாகும்.

நம் முன் நாகரீகமான வாழ்க்கைமுறை ஒன்றை கட்டியெழுப்ப வேண்டிய பாரிய பணியொன்று உள்ளது. மனித உயிர்களை துச்சமென மதிக்கும், மலினப்பட்டுப் போகச் செய்யும், பீதியின் நிழலில் மனித குலத்தை வாழவைக்க முயலும் வன்முறை கலாச்சாரத்திற்கு எதிராக அன்பு, கருணை, சகிப்புத்தன்மை ஆகியவற்றை வலியுறுத்தும் இயக்கம் ஒன்றை முன்னெடுத்துச் செல்லவேண்டிய வரலாற்று அவசியம் எழுந்துள்ளது.

மனித உயிர்களைப் பற்றி கிஞ்சித்தும் கவலைப்படாத சக்திகள் இலங்கையின் தமிழ் சிங்கள சமூகங்கள் மத்தியில் அதிகரித்துள்ளன. யுத்தம் புரிபவர்களுக்கு கொடுக்கப்படும் அளவுக்கு மிஞ்சிய முக்கியத்துவம் சாதாரன மனிதர்களை முகமற்று முக்கியத்துவமிழந்து போகச் செய்துள்ளது. இது காட்டுமிராண்டி நிலையை நோக்கிய ஒரு அடிவைப்பாகும்.


மிக குறுகிய காலத்தில் இந்த வன்முறை கலாச்சாரத்திற்கு முடிவு கட்டாவிட்டால் இலங்கை குறிப்பாக வடக்கு கிழக்கு இன்னுமொரு ஆப்கானிஸ்தான், கம்பூச்சியாவாக மாறுவது தவிர்க்க முடியாததாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழவிடுதலை போராட்ட நெஞ்சங்களில் நீக்கமற நிறைந்த தோழர் பத்மநாபா

வடக்கு கிழக்கில் பல தீர்க்க தரிசிகள் ஞானிகள் தலைவர்கள் தோன்றி இருக்கிறார்கள் மறைந்திருக்கிறார்கள். யோகர் சுவாமி போன்ற சித்தர்களும் ஆறுமுகநாவலர், சி.வை. தாமோதரம்பிள்ளை, தனிநாயகம் அடிகளார், யாழ் நூல் தந்த சுவாமி விபுலாநந்தர் போன்ற அறிஞர்களும், ஹண்டி பேரின்பநாயகம், தந்தை செல்வநாயகம், பொன் கந்தையா, சன்முகதாசன் காராளசிங்கம், போன்ற அரசியல் தலைவர்களும் தோன்றி இருக்கிறார்கள்.

60களில் அமிர்தலிங்கம், சண்முகதாசன் போன்றோர் பிரகாசமான அரசியல் தலைவர்களாக இருந்தார்கள். அமிர்தலிங்கம் அவர்கள் தமிழ் தேசிய வழியில் நின்றும், திரு சண்முகதாசன் அவர்கள் இலங்கையின் சகல மக்களினதும் அரசியல் சமூக பொருளாதார வழியில் நின்றும் செயற்பட்டார்கள். இலங்கை சுதந்திரம் பெற்றதாக கூறப்படும் 1948 இலிருந்து கடந்த 50 வருடங்களில் இன முரண்பாடுகள் கூர்மையடைந்து தற்போது பிரிவினை என்ற கட்டத்தை அடைந்துள்ளது.





மக்களையே நேசித்த அந்த மானுடன் பன்னிரு தோழர்களுடன்


மலையக மக்களின் பிரஜாவுரிமை, வாக்குரிமையை பறிப்பதில் தொடங்கிய இந்த பேரினவாதப் போக்கு 1956 இல் தனி சிங்களச் சட்டமாக அதனை எதிர்த்து ஜனநாயக வழியில் போராடிய தமிழ் தலைவர்களுக்கெதிரான, தாக்குதலாக 1958இல் தமிழ் மக்களுக்கு எதிரான இன வன்முறையாக, 1956, 1965 ஆகிய பகுதிகளில் இனப்பிரச்சினைக்கான தீர்வு முயற்சியில் பேரினவாதச் செயற்பாட்டாளர்களின் சீர் குலைப்பாக, 1970 களின் முற்பகுதியில் உயர் கல்விக்குக் கதவடைப்பாக 1972 இல் இந்த நாட்டின் சிறுபான்மை இன மக்களுக்கு இருந்த அரசியல் யாப்பு ரீதியான பாதுகாப்பை புறந்தள்ளிய அரசியலமைப்பாக 1974 இல் தமிழாராய்ச்சி மாநாட்டுப் படுகொலையாக 1977, 1980, 1983 களில் தமிழ் மக்கள் மீதான அடுத்தடுத்து இன ரீதியான தாக்குதலாக ஒரு தொடர்ச்சியான நிகழ்வுப்போக்காக இருந்தது.

இதன் பிரதிபலிப்பாக தமிழ் மக்கள் மத்தியில் ஜனநாயக ரீதியான, அகிம்சை வழியிலான போராட்டங்கள் ஒரு பயனையும் ஏற்படுத்தாததாக மாறும் சூழ்நிலையில் தமிழ் மக்கள் மத்தியில் இளந்தலைமுறையினர் தேசிய விடுதலைக்கான ஆயுதப் போராட்டம், சமூக, பொருளாதார விடுதலையும் உள்ளடக்கிய போராட்டம் என்ற கருத்துக்கள் வலுவடைகின்றன.

அகிம்சைப் போராட்டம் விடைபெறும் இறுதி காலத்திற்கு சிறிது முந்திய காலமே தோழர் பத்மநாபா அவர்களின் அரசியல் பிரவேச காலமாகும்.

காங்கேசன்துறையில் ஒரு மத்தியதர வர்க்க குடும்பத்தில் பிறந்த தோழர் பத்மநாபா 1970 களில் தமிழ் மாணவர்களின் உயர் கலவிக்கு தடையாக உருவாக்கப்பட்ட தரப்படுத்தலுக்கு எதிரான மாணவர் கிளர்சிகளினூடாக அரசியல் அரங்குக்கு வருகிறார்.

அவரின் அரசியல் பிரவேசம் நிகழ்ந்த 1970 களின் முற்பகுதி பல்வேறு வழிகளில் முக்கியத்துவம் வாய்ந்தது. 1971ம் ஆண்டு இந்த நாட்டின் சிங்கள இளைஞர்கள் சமூக ஏற்றத் தாழ்வுக்கு எதிராக ஒரு கிளர்ச்சியை நடத்தியிருந்தார்கள். அது குரூரமாக நசுக்கப்பட்டது. இதுவே இலங்கை சுதந்திரம் பெற்றதன் பின்னான முதல் ஆய்த எழுச்சி என்பதும் குறிப்பிடத்தக்கது.



84 எப்ரலில் ஒன்றிணைந்த இயக்கத் தலைவர்கள் - தி.மு.க தலைவர் கருணாநிதியுடன் (இடமிருந்து- வலம்) பத்மநாபா, சிறீசபாத்தினம், கருணாநிதி, பாலகுமார்

1972 இல் உருவாக்கப்பட்ட குடியரசு அரசியல் யாப்பு 1948 இன் சோல்பரி அரசியல் யாப்பில் சிறுபான்மை இனங்களுக்களுக்கு உறுதி செய்திருந்த சில அரசியல் சட்ட ரீதியான பாதுகாப்புக்களை இல்லாமல் செய்திருந்தது. மலையகத் தோட்டத் தொழிலாளர்கள் மிக மோசமான நெருக்கடிகளை எதிர் நோக்கினார்கள். தமிழர்கள் தமது அரசியல் சமத்துவத்துக்காக முன் வைத்த கோரிக்கைகள் எல்லாமே உதாசீனம் செய்யப்பட்டு அர்த்தமற்றுப் போயிருந்தன.

தமிழர்கள் அடுத்து என்ன செய்ய வேண்டுமென்ற கேள்வி எழுந்திருந்த காலமிது. மேற்கு பாகிஸ்தானின் ஒடுக்கு முறையிலிருந்து கிழக்கு பாகிஸ்தான் பிரிந்து வங்கதேசம் உருவாகிய காலமிது.

தோழர் பத்மநாபா அவர்களின் அரசியல் திசை வழி தொடர்பான தேடலில் தேசிய விடுதலையும், சமூக பொருளாதார விடுதலையும் என்ற கருத்துக்கள் உருவாவதற்கு இக் காலம் களம் அமைத்துக் கொடுத்தது.

சிறீமா சாஸ்திரி ஒப்பந்தத்தின் கீழ் இந்த நாட்டை விட்டு வெளியேறிய [illegible] மலையகத் தொழிலாளர்களும், தேசிய ஒடுக்குமுறையின் கடைக்கோடி வடிவமாக வடக்கு கிழக்கில் கட்டவிழ்த்து விடப்பட்டிருந்த அடக்கு முறைகளும் அவரின் மனக்கண்ணில் நடமாடின.



(இ-வ) மைத்துனர், மனைவி, தாய், அக்கா, தங்கையுடன் தோழர் நாபா

ஜனநாயக ரீதியாகவும், ஓரளவு வன்முறையையும் கலந்து தமிழ் இளைஞர்கள் போராடினார்கள். தமிழ் இளைஞர்கள் கும்பல் கும்பல்களாக கைது செய்யப்பட்டு நாலாம் மாடியில் சித்திரவதை செய்யப்பட்டார்கள். சிறையில் அடைக்கப்பட்டார்கள்.

இந் நிலைமைகள் தமிழ் இளைஞர்களின் எரிந்துக் கொண்டிருக்கும் உணர்வுகளில் எண்ணெய் வார்ப்பதாக அமைந்திருந்தது.

1974 ஜனவரி 10 இல் தமிழாராய்ச்சி மாநாட்டைக் காண வந்திருந்த தமிழர்கள் மீது நடத்தப்பட்ட பொலிஸ் தாக்குதல் அதில் ஒன்பது பேர் பலியான சம்பவம் இந்திய சுதந்திரப் போராட்டத்தில் பஞ்சாபில் நிகழ்ந்த ஜாலியன் வாலாபாக் படுகொலைக்கு ஒப்பிடப்பட்டது.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் அத்தனை மேடைகளிலும் இது இவ்வாறுதான் கண்டனம் செய்யப்பட்டது.

1976ல் தமிழர் விடுதலை கூட்டணியின் வட்டுக் கோட்டை மாநில மாநாட்டில் தமிழீழத்திற்கான தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதும், 1977 பொதுத் தேர்தல் தமிழீழத்திற்கான மக்கள் ஆணையை பெறுவதற்கான தேர்தல் என பிரச்சாரம் செய்து அமோக வெற்றி பெற்று தமிழர் விடுதலைக் கூட்டணி பாராளுமன்றத்தில் பிரதான எதிர் கட்சி ஆசனத்தில் அமர்ந்ததும் இந்த நாட்டின் சரித்திரத்தில் இடம் பெற்ற சம்பவங்கள்.

1970களின் ஆரம்பத்திலிருந்தே பல்வேறு தமிழர் விரோத பிரச்சாரங்கள் முன்னெடுக்கப் பட்டு பேரினவாத இயக்கம் வலுப்பெற்று 1977 ஜே.ஆர் அரசின் தலைமையில் தனது குரூர முகத்தைக் காட்டியது. 1977 இன் வன்முறை ஜே.ஆரின் தமிழ் மக்கள் மீதான வஞ்சந் தீர்க்கும் எண்ணத்தின் வெளிப்பாடே.

1979 இல் கொண்டுவரப்பட்ட பயங்கரவாதச் தடைச் சட்டமும் அது அமுலுக்கு வந்த உடனடியாகவே ஒன்பது தமிழ் இளைஞர்கள் காணாமல் போனார்கள். அவர்களில் இருவரின் பிணங்கள் "இன்பம், செல்வம்" பண்ணை கடலில் மிதந்தன. சில இளைஞர்கள் படுகொலை செய்யப்பட்டு யாழ்ப்பாணம் கோட்டையில் வைத்து எரிக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

தமிழ் இளைஞர்கள் மீதான இந்த நர வேட்டை கட்டவிழ்த்து விடப்பட்டதன் பின்னர் பல தமிழ் இளைஞர்கள் தலைமறைவானார்கள். அவ்வாறு தேடப்பட்டு தலைமறைவானவர்களில் தோழர் பத்மநாபாவும் ஒருவர்.

1970 களின் நடுப்பகுதியில் தமிழீழ விடுதலை இயக்கம் உருவாக்கப்பட்டபோது (தற்போதைய டெலோ அல்ல) அதன் ஆரம்ப கர்த்தாக்களில் ஒருவராக தோழர் பத்மநாபா இருந்தார். தமிழீழ விடுதலை இயக்க உறுப்பினர்கள் அரசினால் தேடப்பட்ட போதும் தோழர் பத்மநாபா தலை

தொடர்ச்சி 07ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறைவாக வேண்டிய நிலை ஏற்பட்டது.

இங்கிலாந்து சென்ற தோழர் பத்மநாபாவின் மனதில் போராட்டம் சர்வதேச பரிமாணத்தையும் பெற்றது. அங்கு ஈழப் புரட்சி அமைப்பாளர்களில் ஒருவராக பல தோ



கிராமங்கள் தோறும் மக்கள் சந்திப்பில் தோழர் நாபா

ழர்களுடன் சேர்ந்து செயற்பட்டார். பாலஸ்தீனத்தின் பல்வேறு முற்போக்கான விடுதலை இயக்கங்களுடனும், ஆபிரிக்க தேசிய காங்கிரஸ், மற்றும் எரித்திரிய விடுதலை இயக்கங்களுடனும் தொடர்புகள் ஏற்பட்டதும், ஈழப் புரட்சி அமைப்பாளர்கள், ஈழ மாணவர் பொது மன்றம் என்ற ஒரு மாணவர் அமைப்பை உருவாக்கி அரசியல் கல்வி, மற்றும் பத்திரிகைகள். பிரசுரங்களை வெளியிட்டு வந்தனர்.

ஈழ விடுதலை போராட்டத்துக்கான கோட்பாட்டு ரீதியான தேடல் இக் காலக்கட்டத்தில் இடம் பெற்றது. மார்க்சிச-லெனினிசம் வழிகாட்டல் தத்துவமாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. தேசிய இனங்களின் சுய நிர்ணய உரிமைப் பற்றிய கருத்துக்கள் வாதப் பிரதி வாதங்கள் நடைபெற்றன.

விடுதலைப் போராட்டத்தில் மலையக மக்களின் பாத்திரம் பற்றி அலசப்பட்டது. அது இந்த நாட்டின் மிகச் சக்திவாய்ந்த தொழிலாளி வர்க்கமாக இருப்பதால் இனங்களின் சுய நிர்ணய உரிமைப் போராட்டத்திலும், இலங்கையின் சமூகப் பொருளாதார மாற்றத்துக்கான போராட்டத்திலும் அது ஒரு காத்திரமான பங்களிப்பை வழங்கும் என கருதப்பட்டது.



பாசறையில் தோழர்கள் மத்தியில் தோழர் நாபா

வடக்கு-கிழக்கில் பொருளாதார ரீதியாகவும், சாதி ரீதியாகவும், கலாச்சார ரீதியாகவும் ஒடுக்கப்பட்ட மக்களை, விவசாயிகளை, மீனவர்களை அணிதிரட்டுவது, பெண்களை தனியாக அணிதிரட்டுவது பற்றிய கருத்துக்கள் முன் வைக்கப்பட்டன. பிரம்மாண்டமான மக்கள் சக்தியை அணி திரட்டி வழி நடத்தும் புரட்சிகர கட்சி பற்றிய எண்ணக்கரு வலுப்பெற்று இருந்தது.

1980 களின் முற்பகுதியில் ஈழ புரட்சி அமைப்பாளர்களில் பெரும்பான்மைத் தோழர்களும் ஈழ மாணவர் பொது மன்றத்தினரும் முதலாவது அமைப்பாளர் மாநாட்டை நடாத்தினார்கள். இந்த மாநாட்டிற்கு தோழர் பத்மநாபா தலைமை தாங்கினார். ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி உருவாக்கப்பட்டது. அதன் செயலாளர் நாயகமாக தோழர் பத்மநாபா தெரிவு செய்யப்பட்டார். இது ஒரு சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சி.

தோழர் பத்மநாபா அவர்கள் பாலஸ்தீன விடுதலை இயக்கம் ஒன்றின் பாசறையில் பயிற்சி பெற்றவர். லண்டனில் இருக்கும் போது பல சர்வதேச விடுதலை இயக்கங்களுடன் பரிச்சயத்தை ஏற்படுத்திக் கொண்டவர். இந்தியாவில் இருக்கும் போது அவரை தமது மாபெரும் ஆசானாக தமிழ் நாட்டின் இடதுசாரிகளும், முற்போக்கு அரசியலாளர்களும் கருதும் அளவுக்கு வாழ்ந்தவர். இந்தியாவுக்கு புலம் பெயர்ந்த மலையக மக்கள் மத்தியில் வேலை செய்தவர்.

தமிழ் நாடு அளவிலும் அகில இந்திய அளவிலும் பல தலைவர்களை, தோழர்களையும் சந்தித்தவர். இந்திய சுதந்திரப் போராட்ட வீரர்களுடனும், தற்போதைய இந்தியாவின் சமூகப் பொருளாதார விடுதலையை வேண்டி நின்றோருடனும் பரிச்சயத்தை ஏற்படுத்திக் கொண்டவர். பல பத்திரிகையாளர்கள், கலைஞர்கள் அவர் மீது பெருமதிப்பு வைத்திருந்தார்கள். தமிழ் நாட்டின் ரயில்வே, துறைமுக தொழிலாளர் பலருக்கு அவர் பரிச்சயமானவராக இருந்தார். அவர் எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தார் என்பதற்கு அவர் படுகொலை செய்யப்பட்டவுடன் திரண்டு வந்த பல்லாயிரக்கணக்கான மக்களே சான்று. தோழர்களே மக்களே இது ஒரு மாபெரும் வரலாறு.

கடந்த நூற்றாண்டின் தலைசிறந்த பெண்மணியும், இந்தியாவின் தேசிய சமூக பொருளாதார அமைப்பின் சிற்பியும், ஒடுக்கப்பட்ட தேசங்களின் சினேகிதியும், வங்க தேச விடுதலையின் பின்னர் இன்றைய பாரதப் பிரதமர் வாஜ்பேயி அவர்களால் பாராளுமன்றத்தில் துர்க்கா தேவி என விதந்துரைக்கப்பட்ட அன்னை இந்திரா காந்தியை இந்திய மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சியின் காலஞ் சென்ற




தலைவர் ராமமூர்த்தியுடன் சென்று ஈழத் தமிழர் பிரச்சினைப் பற்றி பேசியவர் தோழர் பத்மநாபா.

இயக்கங்களிடையே ஒற்றுமையை வலியுறுத்திய தோழர் நாபா சகல தமிழர் இயக்கங்களுடனும் இடையறாத உறவை பராமரித்து வந்தவர். கையில் பணம் இருக்கிறதோ இல்லையோ மனதில் நம்பிக்கைகளை நிறைத்து "நோ புரொப்பிளம்" என்று சொல்லிக் கொண்டு வேலை செய்தவர் தோழர் பத்மநாபா.

யாழ் குடாநாட்டு செம்மண் பிரதேசத்து கூலி விவசாயிகளாக சாதிரீதியாக ஒடுக்கப்பட்ட மக்கள், திருமலையின் மீனவர்கள், மட். அம்பாறை விவசாயிகள், மலையகத் தோட்டத் தொழிலாளர்கள் என அவர் அலைந்து திரிந்து வேலை செய்தார்.

சிங்கள புத்திஜீவிகள், முற்போக்கு அரசியலாளர்களுடன் எப்போதும் உறவைப் பேணியவர். இலங்கையின் சமூக, பொருளாதார, அரசியல் மாற்றங்கள் பற்றிய பல கருத்தரங்குகளை முன்னின்று நடத்தியவர்.

கொழும்பிலும் வேறு தென் பகுதிகளிலும், பேராதனை பல்கலைகழகத்திலும் சர்வதேச மகளிர் தினம் உட்பட பல நிகழ்ச்சிகளில் பங்கு பற்றியவர்.

கொழும்பில் கைது செய்யப்பட்ட சில தோழர்களுக்கு எதிராக ஜே.ஆர் அரசு நீதி மன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்தபோது சிங்கள தமிழ் தோழர்கள் மொத்தம் 13பேர் மீது அரசை கவிழ்க்க சதி செய்ததாக வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. அவ் வழக்கில் தோழர் பத்மநாபா முதலாவது ஆள்.

புலிகளால் சகோதர இயக்கங்களுக்கெதிராக வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டப் போது ஜனநாயகத்துக்கான போராட்டத்தை தலைமை தாங்கி நடத்தியவர் தோழர் பத்மநாபா.

இயக்கங்களின் ஐக்கியத்தை தனது பிரதான வேலைத் திட்டமாக வலியுறுத்தி வந்த தோழர் பத்மநாபா இந்த சகோதரப் படுகொலையினால் மிகுந்த வேதனைப்பட்டார்.

ரெலோ, புளொட் இயக்கங்கள் தடை செய்யப்பட்டபோது அவர்களுக்கு பாதுகாப்பு கொடுக்குமாறு தமது கட்சி தோழர்களுக்கு அறிவுறுத்தியதோடு புலிகளுக்கு எதிரான கடுமையான விமர்சனத்தை முன் வைத்தார்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலதிபர் அமிர்தலிங்கம் அவர்கள் மீதான தாக்குதல் நீதிக்கும் சமத்துவத்துக்குமான இயக்கத்ததைச் சேர்ந்த கந்தசாமி அவர்கள் மீதான தாக்குதல் போன்றவை அவரால் கடுமையாக விமர்சிக்கப்பட்டவை.

அதிர்ந்து பேசாமை, யதார்த்தத்தை உணர்ந்து காரியமாற்றுவது, ஓய்வொழிச்சலின்றி சமூகத்துக்காக உழைத்துக் கொண்டிருந்தவர்.

தனது குடும்பத்தில் பல துன்பங்கள் வந்த போதெல்லாம் அவர் தனது இலட்சிய வாழ்க்கையையே முதன்மைப்படுத்தி செயற்பட்டார்.

வடக்கு-கிழக்கு மாகாண அரசாங்கத்தை உருவாக்குவதிலும் அதனைச் செயற்படுத்துவதிலும் தோழர் பத்மநாபாவின் பங்கு மகத்தானது. அவரை முதலமைச்சர் பதவி தேடி வந்த போதும் கட்சியின் மத்திய குழு உறுப்பினரான தோழர் வரதராஜபெருமாள் அவர்களை முதலமைச்சராக செயற்படுமாறு கேட்டுக் கொண்டவர்.

மாகாண அரசின் செயற்பாடுகள் சீர்குலைக்கப்பட்டு இந்தியாவுக்கு இடம்பெயர நிர்ப்பந்திக்கப்பட்ட சூழ் நிலையில் தமிழ் நாட்டிலும், ஒரிசாவிலும் தோழர்கள் மத்தியில் நம்பிக்கைச் சுடரொளியை ஏற்றியவர்.

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியை புலிகள் தடை செய்த காலத்திலும் சரி, மாகாண அரசின் சீர்குலைவினால் வடக்கு-கிழக்கை விட்டு வெளியேற வேண்டி ஏற்பட்டக் காலத்திலும் சரி அவர் மனந்தளர்ந்து விடவில்லை. ஒரு அமானுச மனிதராக அவர் செயற்பட்டார்.

எமது போராட்டச் சூழலில் வரலாறு பிரசவித்துத் தந்த அற்புதமான தலைவர் அவர். அவரை ஒத்த தலைவர்கள் தமிழ் சமூகத்தில் அரிதிலும் அரிது.

அவரை அழித்தது ஈழத் தமிழ் பாசிசமே. எமது சமூகத்தில் உள்ள பிரச்சினை என்னவென்றால் தலை சிறந்த மனிதர்கள் எவரும் வாழமுடியாது என்பதே அது. மனித நேயம், அன்பு, ஜனநாயகம், அரசியல் உறுதிப்பாடு எல்லாம் அவரின் அருங்குணங்கள். அவருடைய இழப்பு எமது போராட்டத்தில் ஏற்பட்டு விட்ட நிரப்பப்பட முடியாத வெற்றிடம் எனலாம்.

தோழர் பத்மநாபா அவர்களுக்கும், மறைந்த தோழர்களுக்கும், போராளிகளுக்கும், பொது மக்களுக்கும் சிரந்தாழ்ந்த மரியாதையை தெரிவித்துக் கொள்கிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரை

# அலைபாயுதே

மணிரத்தினத்தின் மற்றொரு பரிசோதனை காதலை ஒரு வேறுபட்ட வடிவில் படமாக்கியது. காதலைப் படமாக்குவது தமிழ் சினிமாவுக்குப் புதிதல்ல. ஆனால் இங்கு மணிரத்தினம் கலியாணத்துக்கு முன்காதல் என்பதை விட கலியாணத்துக்குப் பின் காதல் என்பதைப்பற்றி தொடுத்துள்ள ஒரு சினிமாக்கவிதையே இந்த அலைபாயுதே.

வடக்கின் சின்னத்திரைத் தொடர்களிலும், விளம்பரங்களிலும் நடித்துவந்த மாதவன் இங்கு பெரிய திரைக்கு அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறார். முதற் படத்திலேயே தனது முத்திரையை பதித்துவிட வேண்டும் என்கிற அவரது அக்கறை அவ்வளவு தூரம் சோடை போய்விடவில்லை. சிறிய வயதிலேயே நடிப்பு அனுபவம் பெற்ற சாலினி பெரியவளாகியும் தன்னிடத்தை மற்றவர்கள் சலிக்காத வகையில் காப்பாற்றிக் கொள்கிறார்.

மணிரத்தினம் இந்திய திரையுலகை கலக்கிய பல படங்களை இடையில் நாயகன், மும்பாய், ரோஜா, உயிரே, இருவர், என இயக்கி இருந்தாலும் இந்த அலைபாயுதே அவரது மௌனராகத்தின் மற்றொரு கட்டமென்றே கூறுதல் வேண்டும். ஆனால் இதில் பல வித்தியாசங்கள் உள்ளன.

படத்தின் தன்மையோடு பாடல்கள் அமைந்திருந்தாலும் படத்தின் போக்கோடு பார்க்கையில் அவை இடைச் செருகல்களாக இருப்பதை உணரமுடிகிறது. பாடலே இல்லாமல் படத்தைக் கொண்டு செலுத்தியிருந்திருந்தாலும் படத்தில் வேறுபாடு தெரிந்திருக்க மாட்டாது என்றே தெரிகிறது.




அந்த எண்ணம் முதலில் மணிரத்தினத்துக்கு இருந்திருக்கலாம் போல் தெரிகிறது. பயம் இயல்பானதே. தயாரிப்பாளரும் விநியோகஸ்தர்களும் ஒத்துக்கொள்ள வேண்டுமே!

இப்படத்தில் காதல் மட்டுமல்ல, சமூகத்தின் வெவ்வேறு பொருளாதார சமூக தளத்தில் வாழும் சமூகப் பிரிவினரின் சமூக உளவியல் பிரச்சினைகளும் இங்கு நாசூக்காக கையாளப்பட்டிருக்கின்றன. மாதவருமானத்துக்குள் கணக்குப்போட்டுச் சீவிக்கும் கீழ் மட்ட மத்தியதர வர்க்கம் தனது வாழ்க்கையிலும் கண்ணியம், மானம், சுயமரியாதை, கட்டுப்பாடு என தான் வகுத்த வரைவிலக்கணங்களின் அடிப்படையில் கோடுகள் போட்டு வாழ்வதையும் அதேவேளை பணமும் வசதியும் படைத்தவர்கள் பல சமூக விடயங்களை மிகச்சர்வசாதாரணமாக எடுத்துக் கொண்டு முன் செல்ல முடிவதையும் இப்படம் அடிநாதமாகக் கொண்டிருக்கிறது.

இந்தப் படத்தில் துணைப் பாத்திரத்தை ஏற்று அரவிந்தசாமி நடித்துள்ளமை நடிப்புக்கலையின் மீது அவருக்குள்ள அக்கறையையும் ஈடுபாட்டையும் காட்டுகின்றதென்றே நாம் கூறலாம். ஓரிரு பாத்திரங்களைத் தவிர மற்றப்படி மாதவனும் சாலினியுமே படத்தை முழுமையாக நிறைந்திருக்கும் வகையில் படம் ஆக்கப்பட்டுள்ளது.

இளம் உள்ளங்களுக்கு ஒரு இதமான சுகத்தையும், அனுபவம் உள்ளவர்களுக்கு சோர்வில்லாத திருப்தியைய்யும் தரும் வகையில் மிகச் சுருக்கமாக படத்தை ஆக்கியிருக்கின்றமை பாராட்டக்கூடியதொன்றேயாகும். ●

# சமுத்திரனின் தமிழ் சினிமா விமர்சனம் தொடர்கிறது

இந்த சினிமாக்காரர்கள் தங்களது சட்டவிரோத நடிப்பை நியாயப்படுத்துவது விஞ்ஞானி அப்துல் கலாம் சாதனையைவிட அதிக சாதனையாக சித்தரிக்கப்படுகிறது.

வாரப்பத்திரிக்கையைப் பற்றி சொல்ல வேண்டியதில்லை. அழகான இளம் பெண்ணின் படத்தை அட்டைபடமாக போடாத வாரப்பத்திரிகையே கிடையாது. இந்த அழகிய அட்டைப்பட முகப்பில் பாகிஸ்தானை எப்படி முறியடிப்பது போன்ற கேள்விகள். ஒரு தொலைக்காட்சியில் அதோடு சம்பந்தப்பட்ட வாரப்பத்திரிக்கை குறித்த விளம்பரவரிகளை பேசுகிற பெண்குரல் படுக்கையறைக்கு கூப்பிடுவது போல் ஒலிக்கிறது.

இப்படிக் குறிப்பிடுவதால் நான் பெண்களைக் குறைக்கூறுவதாக ஆகாது. வயிற்றுப் பிழைப்பிற்கு வரும் பெண்களை வைத்தே பெண்மை கொச்சைப்படுத்தப்படுகிறது என்பதே பிரச்சனை. இந்தப் பெண்களைப் போல எல்லா பெண்களும் இல்லை.

இவர்கள் சிறுபான்மையினர்தான். ஒரு ஆணின் ஒடுக்கத்திற்கு ஒரு பெண்ணே தன் ஆடை அலங்காரம் மூலம் பொறுப்பு வகிக்க வேண்டும் என்ற அவலநிலை இருப்பதாக பெண்ணியப் போராளி மைதிலி சிவராமன் தெரிவிக்கும் வேதனையை நானும் பகிர்ந்துக் கொள்கிறேன்.

ஆனாலும் இத்தகைய கலாச்சாரச் சீரழிவுகளுக்கு எதிராக இத்தகைய "தன்னலப்பற்றற்ற" போராளிகள் ஒரு துரும்பைக்கூட எடுத்துப் போடவில்லை. இந்த வேளையில் ஆணாதிக்கம் பிடித்த ஆண்களைப் பற்றி சொல்ல வேண்டியதே இல்லை.

## வாய்தாவே ஒரு அவதி

நீதிமன்றங்களும் குற்றவாளிகளுக்கு கடுமையான தண்டனை வழங்குவதில்லை. அப்படியே வழங்கினாலும் அவை செய்திகளாவதில்லை. இந்தப் பெண்ணுக்கும் எனக்கும் நெருக்கமான பழக்கம். அதனால்தான் இப்படி செய்தேன் ஆட்கள் பார்த்து விட்டதால் அவள் அலட்டிக் கொண்டாள் என்று குற்றஞ்சாட்டப்பட்டவன் பேசாமல் சொல்லி வழக்கை இழுத்துக்கொண்டே போகலாம்.

பாதிக்கப்பட்ட பெண்ணிற்கு வாய்தா என்பதே ஒரு தண்டனை. இதனால்தான் கன்னியாகுமரி மாவட்டத்தில் "நீதிமன்ற வாய்தாவிற்கு அவதி" என்ற மண்வாசனைச் சொல் ஏற்பட்டுள்ளது.

## ஆண் கவர்ச்சி

பத்திரிகையில் வரும் கதைகளில் பெரும்பாலானவை ஆபாசக் களஞ்சியங்கள். ஆபாசம் என்பது அதற்குரிய வார்த்தைகளில் மட்டுமல்ல அதைவிட ஆபாசமானது இலைமறை காய்மறைவான பாலியல் தூண்டுதல் தான். இதற்கு கதைகளில் பஞ்சமில்லை. இவை போதாதென்று சினிமா கிசுகிசுப்புக்கள்.

எவன் பொண்டாட்டி எவனோடு போனாள் என்பது மாதிரியான சித்தரிப்புக்கள். தமிழகத்தில் பாலியல் கள்ள உறவைத் தவிர வேறு எதுவுமே இல்லையென்பது மாதிரியான மாய்மால எழுத்துக்கள். இவைதான் இன்றைய பத்திரிக்கை அலங்காரங்கள். இப்போதோ திரைப்படங்கள் தொலைக்காட்சிகள் ஆகியவற்றில் ஆண்கவர்ச்சியும் தலைகாட்டுகின்றது. உருண்டு திரண்ட உடம்பை பனியனொடு காட்டும் பழக்கம் இப்போது துவங்கியிருக்கிறது.

## செய்யத்தக்கவை

எடுத்துக்கொண்ட விவகாரத்துக்கு வருவோம். பெண்ணைக் கேவலப் படத்துவதில் ஈடுபடுகிறவர்கள் கைதான பிறகு ஜாமீனில் விடப்பட்டார்களா அல்லது மாமியார் வீட்டுக்கு அனுப்பப்பட்டார்களா என்பது நாட்டுக்குத் தெரியவேண்டும். காவல்துறையே இதுகுறித்து அவ்வப்போது அறிக்கை விடவேண்டும்.

இரண்டாவதாக பேருந்துகளில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் தனித்தனி இடஒதுக்கீடு செய்வது இந்தப் பிரச்சனையை எந்த வகையிலும் குறைக்காது. டில்லி போன்ற பெருநகர்களில் பேருந்து இருக்கைகளில் ஆண்களும் பெண்களும் இணையாகவே அமருகிறார்கள்.

எந்த இளைஞனும் எந்த பெண்ணையும் சீண்டியதில்லை. இதனை அவ்வப்போது டில்லிக்கு செல்லும் நான் பேருந்துகளில் பயணிக்கும் போதெல்லாம் உன்னிப்பாக பார்த்ததுண்டு. அங்கே பெண் என்பவள் பாலியல் உருவகத்திற்கு அப்பாற்பட்ட ஒரு மானிடவுரு அவ்வளவுதான். இத்தகைய சமத்துவ இருக்கையை படிப்படியாக இங்கே கொண்டு வந்தால் இந்தப் பிரச்சினை இல்லாது போகலாம்.

மூன்றாவதாக இளைஞர்களுக்கு சமூகப் பொறுப்பை ஊட்ட வெண்டும். அந்தக்காலத்து மாணவர்களாகிய எங்களுக்குத் தெரியும்-திராவிடம் என்பதே பேச்சாகவும் சிந்தனையாகவும் இருந்தது. பெண்களை ஏளனம் செய்வதோ குடித்துவிட்டு வகுப்புக்களுக்குப் போவதோ நாங்கள் கனவில் கூட கண்டறியாதவை.

## உடற்தேவை அல்ல

பாலியல் உணர்வு என்பது உடற்தேவையாக இருக்கவேண்டும் என்பது அவசியம் இல்லை. காலில் அடிப்பட்டால் தொடையில் நெறிகட்டுவதுபோல் வேறுசில அடிப்படைப் பிரச்சினைகள் பாலியல் உணர்வில் வரும். பொதுவாக அடிமன பயம் வெளிமனப் பாலியலாய் தோன்றும். இந்த பயத்திற்கு பல்வேறு காரணங்கள் உண்டு.

இப்படி வரும் பாலியல் மனநோயானது பெண்ணைக் கேலிசெய்யும் வடிவாய் வெளிப்படும். உடலுறவாலும் இந்த மனநோய் தீராது. அடிமனப்பயத்தை ஒழித்தால் வெளிமனப் பாலியல் வக்கிரம் விடுபடும்.

அடுத்த இதழில் தொடரும்

# டைனோசர் (DINOSAUR)

இன்னும் 100 வருடங்கள் சென்றபின் டிஸ்னியின் (வேல்ட் டிஸ்னி-World Disney) "டைனோசர்" போன்று வேறு எதுவும் இருக்காது. இந்த ஆர்வமிக்க திரைப்படத்தில் வரும் டைனோசர்கள் போன்று 100 மில்லியன் வருடங்களுக்கு முன் இந்த உலகில் வேறு எவையும் இருந்திருக்க முடியாது. முற்றிலும் பிரமிக்க வைக்கும் காட்சிகள் கொண்டது.

பண்டைய உலகின் நிஜங்களாகக் காட்சியளிக்கும் டைனோசர்கள் நடந்து கொண்டு உரையாடி தற்கால உணர்வுகளை வெளிப்படுத்தும் போதுதான் சுவாரஸ்யம் ஆரம்பமாகிறது. ஆச்சரியத்தால் அகல விழிக்கும் சிறுவர் சிறுமியர். இத் திரைப்படத்தை அப்படியே நம்பி ஏற்றுக் கொள்வார்கள்.


ஆனால் வயது வந்தவர்கள் தம் உள்ளத்தை கெட்டியாகப் பிடித்துக் கொள்வார்களேயானால் இதனை நம்புவதற்குக் கடினமாகவேயிருக்கும். "Tarzan Meets Waterworld" என்ற கதையே இந்தப் படத்தின் கரு ஊற்றுமூலம். அலடார் என்னும் இக்வானா(Iguana) இனத்தவர்களைச் சேர்ந்த சிறுவன் ஒருவன் தனது தாயிடமிருந்து பிரிக்கப்பட்டு ஒரு லெமூரிய இனத்தைச் சேர்ந்த குடும்பத்தினரால் வளர்க்கப்படுகின்றான். அக் குடும்பத்தில் பிளியோ (Plio), யார் (Yar), சினி (Zini) என்பவர்கள் உள்ளனர்.



அந்தக் குடும்பம் வாழ்ந்த தீவை ஓர் பாரிய ஆகாயக்கல் (meteor) தாக்கி அழித்ததை அடுத்து அவர்கள் ஓர் தற்காலிக தங்குமிடத்தை நாடிச் செல்ல வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகிறது. இவர்களுடன் ஒரு கூட்டம் டைனோசர்களை ஆஜானுபாகுவான கிறொன் (Kron) என்பவனும் அவன் உதவியாளன் புறூட்டன் (Bruton) என்பவனும் வழி நடத்திச் செல்கின்றனர். அவர்களுடன் கூடவே கிறொன் இன் சகோதரி நீரா (Neera) வும் செல்கிறார்கள். நீரா மீது அலடாரின் காதல் பார்வை விழுகிறது.

இவ்வாறு செல்கையில் அவர்கள் தங்களுடன் இணையாக வரமுடியாதவர்களை பின்னே விட்டபடியே செல்கின்றனர். அதேவேளை தங்கள் காலத்துக்கும் முந்திய இனத்தவர்களின் கண்ணில் படாமல் கவனமாக முன்னேறுகிறார்கள். புத்தி கூர்மையும் இரக்கமும் கொண்ட அலடார் டைனோசர்கள் கூட்டாக உழைத்து உயிர்வாழக் கூடியவை என்பதை வெளிப்படுத்துகிறான்.

"டைனோசர்" திரைப்[illegible]




அதியற்புதமான காட்சிகளால் ஓகோ என்று ஓடுகிறது. தயாரிப்பாளர் குழு நிஜமான நிலப்பரப்புக் காட்சிகளை படமாக்கி அவற்றுள் கணனி உருவாக்கம் பெற்ற டைனோசர்களை புகுத்தி ஓர் தத்ரூபமான தோற்றத்தை ஏற்படுத்தியுள்ளனர். லெமூரிய இன பாத்திரங்கள் சில வேளைகளில் செயற்கையானவை போல் தோற்றமளித்தாலும் பொதுவாக அவை அபாரமாக உயிரூட்டமாக உள்ளன.

டைனோசர் முட்டை ஒன்றின் பயணம், ஆகாயக் கற்களின் வீழ்ச்சி, குடும்பம் குடும்பமாக இடம் பெயருதல் மற்றும் இரைதேடும் விலங்குகளுடனான சண்டைகள் ஆகிய உரையாடல் இல்லாத காட்சிகள் யாவும் இத் திரைப்படத்திற்குப் பலமூட்டும் பகுதிகளாகக் காணப்படுகின்றன.

இது ஓர் பய - வியப்பு உணர்வை ஊட்டும் திரைப்படம். றாஸ்ஃப் ஸொண்டாக் (Ralph Zondac) எறிக் லெய்ற்றன் (Eric Leighton) ஆகியோரின் உருவாக்க நெறிப்படுத்தலானது புராதான உலகின் நிகழ்வுகளுக்கு புத் [illegible] பிராணிகள் உரையாடும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் நம்பகத்தன்மை நழுவி விடுகிறது. பாத்திரங்களுக்கு ஏற்றவாறு குரலமைப்புக்கள் இருக்கின்றன. ஆனால் டைனோசர்கள் கிண்டலடிக்கின்றன தற்கால விடயங்களுடன் பரிச்சயமானவைகளாகப் பேசுகின்றன-செயற்படுகின்றன.

அத்துடன் அமெரிக்க ஆங்கில உச்சரிப்புக்களிலேயே உரையாடுகின்றன. இவையாவும் படத்தில் பரபரப்பை ஏற்படுத்தினாலும் கொஞ்சம் அதிகமாகவே காணப்படுகின்றன. டைனோசர்கள் இவ்வளவு புத்தி கூர்மை உடைவைகளாக இருந்திருந்தால் இவைகள் இப்போதும் தற்கால நகரங்களில் வாழ்ந்துக் கொண்டிருக்க நேரிட்டிருக்கும் அல்லது ஃபிறெட் ஃபிளின்ரனின் (Fred Flintone's Bedrock) "பெட்றொக்" இல் இடம் பெற்றிருக்க முடியும்.

"டைனோசர்" ஒரு சுவாரஸ்யமான குடும்பச் சித்திரம். ஆனால் அதில் இடம்பெற்றுள்ள மலிவான பகிடிகளும், பாத்திரங்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகமான மதிநுட்பங்களும் தவிர்க்கப்பட்டு ஓர் இயற்கையான அணுகுமுறைகள் கையாளப்பட்டிருந்தால். இந்த ஆரவாரமான திரைப்படம் உண்மையில் அனைவரையும் "ஆ" வெனச் செய்யும் வகையில் ஓர் அற்புதமான அசையும் திரைச் சித்திரமாக விளங்கியிருக்கும். ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மலையகத்தின் அரசியல் தலைமைத்துவ நெருக்கடி

குறிஞ்சி மைந்தன்

அண்மையில் பத்திரிகைகளிலும் மற்றும் செய்தி ஊடகங்களிலும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் இனுள் ஏற்பட்ட நெருக்கடி முக்கியத்துவம் பெற்றிருந்தது. இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் இன் செயற்குழுவில் இந்தப் பிரச்சினை பிரதிபலித்தது பிரச்சினையின் தாற்பரியங்களை பற்றி இங்கு அலசப் போவதற்காக அல்ல.

இன்று நாடும் சிறுபான்மை இன மக்களும் குறிப்பாக மலையகத் தமிழ் மக்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகளைக் கருத்திற்கெடுக்கும் போது இந்த நிகழ்வானது ஒரு காலப்பொருத்தமற்ற நிகழ்வாகும். மலையகத்தின் தொழிற்சங்கங்களும், அரசியல் கட்சிகளும் ஒருமித்த குரலில் செயற்படவேண்டிய காலக்கட்டத்தில் இந்த நிகழ்வு துரதிஷ்டவசமானதாகும்.

மலையக மக்கள் பல்வேறு பிரச்சினைகளை எதிர் நோக்குகின்றார்கள். தோட்ட கம்பனிகள் தோட்டத் தொழிலாளர்களுக்கு வழங்கும் சம்பளம் இந்த புதிய நூற்றாண்டின் முற்பகுதியின் விலைவாசிகளுக்கும் வாழ்க்கை செலவுகளுக்கும் பொருத்தமற்றதொன்றாகும். எட்டு ரூபா சம்பள உயர்வை பெறுவதற்கு மிகப் பாரிய போராட்டங்களை நடாத்த வேண்டியிருக்கிறது.

மலையகத் தோட்டங்களில் வசதிகளை ஏற்படுத்துவதற்கு தோட்ட உட்கட்ட அமைச்சில் தனியான அமைச்சு ஒன்று உருவாக்கப்பட்டும் அது மலையகத்தினுள் தாக்கமானதாக தனது பணிகளை ஆற்றமுடியவில்லை. மின்சாரம் வழங்குதல், தொழிற்பயிற்சிகளை வழங்குதல் போன்ற முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டாலும் அது மிக மிக ஆரம்ப நிலையிலேயே இருக்கின்றன. தோட்டத் தொழிலாளர்களுக்கு வீடமைப்பு வசதிகள் செய்து கொடுக்கும் வேலைகள் கூட சில ஆயிரம் பேருக்கு மேல் அது செல்லவில்லை.

பாடசாலைகளோ, சுகாதார நிலையங்களோ பெருமளவுக்கு விஸ்தரிக்கப்படவில்லை. இவை பற்றி பத்திரிகைகளில் பேசப்படும் அளவுக்கு வேலைகள் நடைபெறவில்லை.

தொழிலாளர்களின் தொழில் உரிமை, பாதுகாப்பு, பெண்கள் எதிர் நோக்கும் பிரச்சினை கட்டாயகருத்தடை சிறுவர்கள் வீட்டு வேலைக்காரர்களாக நாடுமுழுவதற்கும் அனுப்பப்படும் நிலை தோட்டநிர்வாகங்களினால் தொழிலாளர்கள் மீது மேற்கொள்ளப்படும் கெடுபிடிகள் போன்றனவற்றில் எல்லாம் எந்தவித மாறுதல்களும் நிகழவில்லை. இத்தனைக்கும் இலங்கையின் பிரதான ஏற்றுமதி பொருளாக தேயிலை விளங்குகிறது.

இவை எல்லாவற்றுக்கும் மேலாக இன ரீதியான அச்சுறுத்தல்களும், முன்னெப்போதையும்விட அதிகரித்துக் காணப்படுகின்றன.

நிலைமை இவ்வாறு இருப்பினும் மலையகத்தின் இளந் தலைமுறையினர் மத்தியில் ஒரு விழிப்புணர்ச்சிக் காணப்படுகின்றது. மலையக மக்களின் அரசியல் உரிமைகள் தொழில் உரிமைகள், கல்வி, கலாச்சாரம், வேலைவாய்ப்பு போன்றவைகளில் இவர்கள் பாரிய மாற்றங்களை இந்தத் தலைமுறையினர் எதிர்பார்க்கின்றார்கள்.

வடக்கு-கிழக்கு தமிழ், முஸ்லீம் மக்கள் கோருவது போல் இவர்கள் தமது தனித்துவத்தின் அடிப்படையில் அரசியல் உரிமைகள் நிலைநாட்டப்பட வேண்டும் என எதிர்பார்க்கின்றார்கள். இந்த நாட்டின் சமூக அடுக்கில் அடிமட்டத்தில் வாழ்ந்த மலையக மக்களின் புதிய தலைமுறை அவ்வாறு எதிர்பார்ப்பது முற்றிலும் நியாயமானதே. இலங்கை பல இனங்களின் நாடு என்பது உண்மையானால் அது மலையகத் தமிழ் மக்களினதும் அரசியல் உரிமைகள் உறுதிப்படுத்தப் படுத்தப்படுவதனாலேயே பூரணப்படுத்த முடியும். இங்கு மலையக மக்களின் அரசியல் உரிமை என்றால் என்ன என்று யாராவது கேட்கக்கூடும். அவர்கள் செறிந்து வாழும் மலையகத்தில் மற்ற சமூகங்களுடன் சரிநிகர், சமானமாக தனித்துவத்துடன் வாழ்வதென்பதே அது.

வடக்கு கிழக்கில் தமிழ் மக்களுக்கெனவும் தென்கிழக்கில் முஸ்லீம் மக்களுக்கெனவும் தனித்துவமான அலகுகள் கோரப்படும்போது மலையகத்தில் மலையக மக்களுக்கென்று தனித்துவமான அமைப்பு ஒன்று கோரப்படுவதில் என்ன தவறு? என்பதுதான் புரியாத புதிராக இருக்கிறது. இதனை இனவாதக் கண்கொண்டு பார்க்காமல் அதிகாரங்கள் பல்வேறுமட்டங்களுக்கும் பரவலாக்கப்படுவதை போல இன தனித்துவங்களுக்கு ஏற்ப பகிரப்படுவதாகவே நாம் கருத முடியும்.



அரசியல் யாப்பு சீர்திருத்தங்கள் சம்பந்தமாகப் பேசப்படும் போது மலையக மக்களின் உரிமைகள் தொடர்பாக பேசப்படாதது மிகவும் தூரதிஷ்டமானதாகும். மலையக அரசியல் கட்சிகள் மாத்திரமல்ல ஏனைய அனைத்து சகல பிரிவு மக்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் ஸ்தாபனங்களும் இதனை வலியுறுத்தியிருக்க வேண்டும். மக்களுக்கு அதிகாரங்கள் வழங்கப்படுவது பிரிவினைக்கு வழிவகுக்கும் என்ற பேரினவாத கற்பிதமே நாம் எதிர் நோக்கும் பாரிய பிரச்சினையாகும்.

கடந்த நூறு வருடங்களில் இந்த நாட்டில் நடந்த இன ரீதியான தாக்குதல்களுக்கு இன்று வடகிழக்கில் இரத்தம் ஆறாக ஓடுவதற்கும் நாட்டின் தலைநகர் கொழும்பு உட்பட பல்வேறு பகுதிகளிலும் பேரினவாதத்தின் குரூரம் தலை காட்டுவதற்கும், பல மனித உரிமை மீறல்கள், படுகொலைகள், காணாமல் போதல் போன்ற சம்பவங்களுக்கும் இந்த பேரினவாதமே வித்திட்டது. இந்த விருட்சம் பல சிறிய பெரிய விருட்சங்களை உருவாக்கியுள்ளது.

மலையக மக்களின் பிரச்சினை என்னவென்று கேட்டால் பிரஜாவுரிமை, மற்றும் சம்பள உயர்வு கோரிக்கைகளே என்று பலரும் எளிமைப் படுத்திவிட முயல்கிறார்கள். இது சமூகம் பற்றிய அறிவின்மையையும் மேலாதிக்க மனோபாவத்தையும் அடிப்படையாகக் கொண்டதாகும்.

ஆனாலும் இந்தப் பிரச்சினைகளே முற்றுமுழுதாக தீர்ந்தப்பாடில்லை. இன்று சோதனைச் சாவடிகளில் தேசிய அடையாள அட்டை இல்லை என்பதற்காக பாதிக்கப்படுபவர்களும் பல நகரங்களில் நடைபெறும் முற்றுகைகளினால் கைது செய்யப்படுபவர்களும் கணிசமான அளவு மலையக இளைஞர்களாகவே இருக்கின்றார்கள்.

சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தம் இந்திரா-சிறிமா ஒப்பந்தம் இறுதியாக 1987 முற்பகுதியில் 93ஆயிரம் குடும்பங்களுக்கு பிரஜா உரிமை வழங்குவது என்ற தீர்மானத்துடன் இந்தப் பிரச்சினையை முடிவுக்குக் கொண்டு வந்திருக்க வேண்டும். இன்று அடையாள அட்டை வழங்குவதில் உள்ள இழுபறி இதில் தயக்கங்கள் இருப்பதையும் காட்டுகின்றன.

மலையகத் தோட்டங்களினுள் கிராமங்களை உருவாக்குதல் என்ற [illegible] சில சக்திகள் தீவிர முயற்சி எடுத்து வருகின்றன. மறுபுறம் வடக்கு-கிழக்கில் தமிழ் அடிப்படை தீவிரவாத சக்திகள் மலையகத்தை தமது யுத்த தேவைகளுக்கு ஆள் சேர்க்கும் களமாகவும் பயன்படுத்தி வருகின்றன. இதனால் மக்கள் தேவையில்லாத அநாவசியமான நெருக்கடிகளை அனுபவித்து வருகிறார்கள்.

இன்னும் பல மலையக இளைஞர்கள் பயங்கரவாத தடை சட்டத்தின் கீழ் சிறை வைக்கப்பட்டிருக்கின்றார்கள். தோட்டங்கள் சுற்றிவளைக்கப்பட்டு அடிக்கடி கைது செய்யப்படுகின்றார்கள். மலையகத்தைச் சாராத வெளியார் அங்கு சென்று வருவது கண்காணிப்புக்குள்ளாகி வருகிறது.

பொருளாதார சுமை பேரினவாத நெருக்குதல் மற்றும் மனித உரிமை பிரச்சினைகளை அவர்கள் எதிர் நோக்குகிறார்கள். இதனால் மலையக மக்களின் சரியான திசைவழியிலான அரசியல் நடவடிக்கைகளும் அபிவிருத்தி செயற்பாடுகளும் தேக்கமடைந்துள்ளன.

இத்தகைய சூழ்நிலையில்தான் மலையக அரசியல் இயக்கங்களில் ஏற்படும் பிளவுகள் பிரச்சினையாக உள்ளன. ஒரு சமூகத்தில் அரசியல் இயக்கங்களிடையே ஏற்படும் மோதல்கள் எத்தகைய விளைவை ஏற்படுத்தும் என்பதற்கு வடக்கு-கிழக்கில் கடந்த 20 ஆண்டுகால அரசியல் இயக்கங்களின் வரலாறு நல்ல உதாரணமாகும்.

மாறுபட்ட அபிப்பிராயங்களுடன், கொள்கைகளுடன் பல்வேறு இயக்கங்களின் செயற்பாடு புலிகளினால் ஜனநாயக நெருக்கடிக்குள்ளானது யாரும் அறியாததல்ல. அங்கு பாரிய தலைமைத்துவ வெற்றிடமே ஏற்பட்டுள்ளது. முழுச் சமூகமுமே அழிவின் விளிம்பில் நிறுத்தப்பட்டுள்ளது. மலையகத்தில் அத்தகைய ஜனநாயக விரோத நடவடிக்கையோ வன்முறை கலாச்சாரமோ இல்லை என்பது சற்று ஆறுதலான விடயம்.

ஆனால் மலையகத்தில் உள்ள அரசியல், தொழிற்சங்க ஸ்தாபனங்கள் ஐக்கியமாக மலையக மக்களின் உரிமைக்காக குரல் கொடுக்க வேண்டும் என்பது ஒரு வரலாற்று அவசியமாகும். ஏற்கனவே மலையக மக்கள் முன்னணிக்குள்ளும் பிரச்சினைகள் ஏற்பட்டன. தற்போது காங்கிரஸில் ஏற்பட்டுள்ளது.

அமரர் தொண்டமான் அவர்கள் தனது ஆளுமை, புத்திக்கூர்மை ஆகியவற்றால் 50 ஆண்டு காலம் மலையக மக்களுக்கு தனிப்பெரும் தலைவராக திகழ்ந்தார் பல்வேறு நெருக்கடிகள் பேரினவாத அவமதிப்புக்களுக்கு மத்தியில் அவர் மலையக தமிழ் மக்கள் தலை நிமிர்ந்து வாழ்வதற்கான அடிப்படை நிலைமைகளை உருவாக்குவதில் சில சாதனைகளை புரிந்துள்ளார். ஆனால் அடிப்படைகளே விமோசனம் அல்ல.

மலையக மக்கள் தமது சமூக பொருளாதார வாழ்வில் மேம்பாட்டை அடைவதற்கு இன்னும் நீண்ட தூரம் பயணம் செய்ய வேண்டும். இலங்கை சுதந்திரம் பெறுவதற்கு முன்னர் கோ. நடேசஐயர் போன்ற தலைவர்கள் மலையகத்தில் தொழிற்சங்க இயக்கத்தை கட்டி எழுப்புவதில் பல்வேறு இடர்களுக்கு மத்தியிலும் செயலூக்கமுள்ள மனிதர்களாக செயற்பட்டார்கள்.

இலங்கையின் இடதுசாரி இயக்கத்தலைவர்ளும் இலங்கையின் சமூக மாற்றத்தில் மலையக மக்களின் பங்களிப்பு பற்றி அசைக்க முடியாத நம்பிக்கைக் கொண்டிருந்தனர் இலங்கை சுதந்திரம் பெற்ற அண்மைக் காலத்தில் ஏழு பாராளுமன்ற பிரதிநிதித்துவம் மலையக மக்களுக்கு இருந்தது.

வாக்குரிமை, பிரஜாவுரிமை பறிக்கப்பட்டதுடன் மிக நீண்ட காலத்திற்கு அவர்களுக்கு மக்களால் தெரிவுசெய்யப்பட்ட பாராளுமன்ற அங்கத்துவம் இல்லாத நிலையே காணப்பட்டது.

மூன்று தசாப்தங்களுக்கு மலையக மக்களுக்கு பிரதிநிதித்துவம் இல்லை 1978 இல் புதிய அரசியல் யாப்பின் பின்னர் சில பிரதிநிதித்துவங்கள் கிடைத்தன. தற்போது மாகாணசபை, உள்ளூராட்சி சபைகளினாலும் பிரதிநிதித்துவங்கள் ஓரளவுக்கேனும் கிடைத்துள்ளன. மலையகம் தவிர்ந்த மலையக மக்கள் செறிந்துவாழும் ஏனைய பிரதேசங்களில் பிரதிநிதித்துவங்கள் இருக்கின்றன. ஆனால் இவை மாத்திரம் மலையக மக்களின் சமூக பொருளாதார வாழ்வில் பாரிய மாற்றத்தை கொண்டுவந்துவிடாது.

தொழிற்சங்க கோரிக்கைகள் எமக்கு ஜீவாதாரமானவையே. ஆனால் அதேவேளை எமது அரசியல் உரிமைகள் நிலைநாட்டப்படாவிட்டால் நாம் கூலி உயர்வு கோரிக்கையின் உள்ளேயே சுழலும் ஒரு சமூகமாக மாறிவிடுவோம். இந்த நூற்றாண்டின் முற்பகுதியின் உலக சமுதாயத்தின் ஒரு பகுதியினராக நாம் முன்னேற வேண்டும்.

உலக கிராமம் பற்றி பேசப்படும் இக் காலக்கட்டத்தில்தான் எமது கிராமங்கள் அங்கீகரிக்கப்பட்டு இருக்கின்றன. இப்போதுதான் எமது கிராமங்களுக்கு கிராம சேவையாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள். இப்போதுதான் எமது ஒரு சில பாடசாலைகளில் மாணவர்கள் நாட்டின் தராதரத்திற்கேற்ப பெறுபேறுகளை பெறுகிறார்கள். ஆனால் இப்போதுதான் எமது பிரதேசங்களில் கல்வியியல் கல்லூரி நிறுவப்பட்டுள்ளது. இவையெல்லாம் சிறந்த அம்சங்களே.

ஆனால் நாட்டின் அரசியல் யாப்புச் சீர்திருத்தத்திலும் நாட்டை உலுக்கிக் கொண்டிருக்கும் யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவருவதிலும் நாம் எமது அரசியல் தலைமைகள் காத்திரமான பங்களிப்பை வழங்க வேண்டும். அண்மையில் மலையகத்தின் அரசியல் கட்சிகள், தொழிற்சங்கங்கள் அரச சார்பற்ற ஸ்தாபனங்கள் இணைந்து அரசியல் யாப்பு சீர்திருத்தத்தில் மலையக மக்கள் தொடர்பாக உள்ளடக்கப்பட வேண்டிய விடயங்களை பிரஸ்தாபித்திருந்தன. உண்மையில் இது ஒரு நல்ல சகுனமாகும்.

இலங்கையின் மொத்த அரசியல் நிலவரங்களை அவதானிக்கும்போது எமது ஒன்றுபட்ட செயற்பாடு முன்னெப்போதையும் விட அவசியமாகிறது. பிளவுகள் மேலும் மேலும் எம்மை பலயீனமாக்கிவிடும்.

இலங்கையின் தேசிய அரசியல் கட்சிகள் என்று சொல்லப்படுபவை கூட பாராளுமன்ற தேர்தல்களிலும் ஜனாதிபதி தேர்தல்களிலும் மற்றும் மாகாணசபை உள்ளூராட்சி தேர்தல்களிலும் எமது அனுசரணை அவர்களுக்கு தேவைப்படுகிறது இது எமது பேரம் பேசும் பலத்தின் ஒரு அம்சமாகும். நாம் பிளவுபட்டால் இந்தப் பலம் பலயீனமாகிவிடலாம். எனவே மலையக அரசியல், தொழிற்சங்க இயக்கங்கள் இவற்றை மனம் கொண்டு செயற்பட வேண்டும் என்பதே எமது மக்களின் பெருவிருப்பாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சோக்கிரட்டீஸ்

அரசியல் தீர்வு முயற்சிகள் முன்னேற்றங்கள் எந்தளவில் இருக்கின்றன?

**இ. அரசரத்தினம், மட்டகளப்பு.**

யுத்தத்தின் அனலில் வாடிவதங்கிப் போயுள்ளன.

***

அமெரிக்காவின் பிரதி வெளிவிவகாரச் செயலாளர் பிக்கரிங் என்னதான் கூறிச்சென்றிருக்கிறார்?

**க. மணிவண்ணன், வவுனியா.**

ஈழம் மனித சஞ்சாரமில்லாத ஒரு கிரகத்தில் தான் சாத்தியம் என்று. அவசரகால சட்ட விதிகள் அளவுக்கதிகமாக பாவிக்கப் படுகின்றன என்று. ஐக்கிய இலங்கைக்குள் தான் தீர்வு என்று.

***

இலங்கைப் பிரச்சினை பற்றிப்பேச வரும் வெளிநாடுகள் எல்லாம் புதுடில்லியில் பேச்சுவார்த்தை நடத்திவிட்டு இலங்கை வருகிறார்கள்? இல்லாவிடில் வந்தவழியே சென்று விடுகின்றனரே ஏன்?

**த. கலைச்செல்வி, திருமலை.**

இலங்கையில் நடைபெறும் பிரச்சினையை அவர்கள் உபகண்டப் பிரச்சினையாகவே விளங்கிக் கொண்டிருக்கின்றார்கள். இங்குள்ளவர்களுக்குத் தான் இன்னமும் விளங்கவில்லை.

***

நோர்வேயின் சமாதான முயற்சிகள் எந்தளவில் இருக்கின்றன?

**எம். மனுவேற்பிள்ளை, மன்னார்.**

அது இன்னும்பல ஆறுகளையும், காடுகளையும் மலைகளையும் தாண்ட வேண்டுமே வெற்றிபெற வாழ்த்துவோம்.

***

இந்தியா இலங்கையின் நெருக்கடிகளுக்கு மனிதாபிமான உதவிகளைச் செய்யத் தயாராக இருப்பதாக கூறுகிறது அதன் அர்த்தம் என்ன ?

**க. சிதம்பரநாதன், கொழும்பு.**

மக்கள் இடம் பெயர்கிறார்கள் நாட்டின் ஏனைய பகுதியிலிருந்து குடா நாடு துண்டிக்கப்பட்டு இருக்கின்றது. பீரங்கிகளை பாவித்து யுத்தம் நடை பெறுகின்றது. யுத்த வெற்றி தோல்விகள் பல ரத்தகளரிகளை உருவாக்கலாம். எனவே அதற்கு விரிவான அர்த்தம் உண்டு.

***

தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி அவர்கள் புலிகளை ஏக பிரதிநிதிகள் என்று கூறமுடியாது அவர்கள் பல தமிழ் தலைவர்களை அழித்துள்ளதாக கூறியுள்ளாரே?

**ச. விஜயலெட்சுமி, அக்கரைபற்று.**

அனுபவப்பட்டவர். வேதனைப்பட்டவர். ஜனநாயகச்சூழலில் அரசியல் செய்பவர். உலகத் தமிழர்களின் தலைவரென்ற ஸ்தானத்தில் இருப்பவர். கருத்தில் கனதியும் பொறுப்புணர்ச்சியும் இயல்பானதே.

***

தீர்வுப் பொதி பாராளுமன்றத்திற்கு வரும் சாத்தியமுண்டா?

**அ. அப்துல்றசாக், ஏறாவூர்.**

ஐ.தே.க வுடன் நடைபெற்ற பேச்சுவார்த்தைகள் முடிவடைந்த கையோடு சர்வசன வாக்கெடுப்பொன்றின் மூலம் மக்கள் ஆணையைப் பெற்று பாராளுமன்றத்தை அரசியல் நிர்ணயசபையாக மாற்றி அங்கு பொதி நிறைவேற்றப் பட்டு நோர்வேயிடம் கையளிக்கப்படலாம் என்றவொரு கதையும் உண்டு.

***

இப்போதைய அரசியல் போக்குகளை பார்க்கும்போது என்ன தோன்றுகிறது?

**ச. சோமசுந்தரம், நுவரெலியா.**

பிரச்சினைகள் தீர்வதற்கு மிக நீண்டகாலம் பிடிக்கும் என்பதையே உணர்த்துகின்றன. காலங்கள் தவறிக் கொண்டே போகின்றன.

***

யாழ்ப்பாணத்தில் ஏற்பட்ட நிலைமைகள் தொடர்பாக இந்தியாவின் நிலை ப்பாடு பற்றி?

**இ. ரவிச்சந்திரன், பதுளை.**

எத்தகைய அகப்புறக் காரணங்கள் இருப்பினும் இந்தியா மிக நிதானமாக நடந்துக் கொள்ள முனைகிறது என்பதே பலரது கருத்து. மனிதாபிமான உதவி என்பதும் அதிகாரப்பகிர்வு முன்னையவற்றைவிட மேம்பட்டதாக இருக்கவேண்டும் என்பதும் சிறந்த விடயங்களே.

***

சர்வதேச அளவில் இலங்கைப்பிரச்சினை எத்தகைய முக்கியத்துவத்தை தற்போது பெற்றுள்ளது?

**மு. கமலநாதன், திருமலை.**

கொசோவா, பொஸ்னியப் பிரச்சினைகளுக்கு அண்மையாக வந்து விட்டது.

***

யாழ்குடாநாட்டு யுத்தத்தைத் தொடர்ந்து வடக்கு - கிழக்கில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் எவை?

**க. பவானி, வவுனியா.**

வாழ்க்கை சகல வழிகளிலும் சிதைந்துக் கொண்டிருக்கிறது. வெறிச்சோடிய மனநிலையே எங்கும் வியாபித்திருக்கிறது. அகதிகளாக இடம்பெயர்ந்து கொண்டிருக்கும் யாழ் மக்கள் வானொலியில் ஏதாவது சமாதானச் செய்திகள் வராதா என்று ஏங்கியபடி தான் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள்.

***

புனர்வாழ்வு அபிவிருத்திப் பணிகள் வடக்கு - கிழக்கில் எவ்வாறு இருக்கின்றன?

**சி. சூசைப்பிள்ளை, மட்டக்களப்பு.**

மனித இருப்பே கேள்விக்குறியான தன் விளைவாக இவை பொருள் இழந்த சொற்களாக மாறியுள்ளன.

***


# கிரிக்கெட் சூதாட்டம்

ஏறத்தாழ 200 வருடங்களுக்கு முன்னர் இங்கிலாந்தில் அறிமுகப்படுத்தப்பட்ட கிரிக்கட் விளையாட்டு 1970ம் ஆண்டு வரை "ஜென்டில் மென்"விளையாட்டு என அழைக்கப்பட்டு வந்தது. ஆயினும் 1970 இற்குப் பின்னர் மட்டுப்படுத்தப்பட்ட ஓவர் போட்டிகள் - ஒரு நாள் சர்வதேச கிரிக்கட் போட்டிகள் அறிமுகப்படுத்தப்பட்டதன் விளைவாக கிரிக்கெட் விளையாட்டிலும் போட்டி, பொறாமை, சூதாட்டம் போன்ற அழிவுச் சக்திகளின் தலையீட்டிற்குப் பலியாகத் தொடங்கியது.

சரித்திர வரலாற்றிலே "டெஸ்ட் மட்ச்" போட்டிகள், விளையாட்டு வீரர்கள் தங்கள் தனித் திறமைகளினால் நாட்டுப் பற்றுடன் தங்கள் நாட்டின் புகழை மேம்படுத்தும் முயற்சிகளில் ஈடுபட்டனர். ஆனால் பிறக்கப்போகும் குழந்தை ஆணா, பெண்ணா என்பதிலேயே கோடிக்கணக்கான டாலர்களுக்கு பந்தயம் கட்டும் நவீன சூதாட்ட உலகில், ஜென்டில்மென் விளையாட்டான கிரிக்கெட்டும் தப்பவில்லை.

வானிலை காரணமாக போட்டி முழுமையாக நடக்குமா, நடக்காதா நாணயச் சுழற்சியில் எந்த அணித் தலைவர் சரியாகக் கூறுவார். துடுப்பாட்ட வீரர்களில் குறிப்பிட்ட அணியின் திறமையானவர்களில் யார் 50, 100 ஓட்டங்கள் பெறுவார்கள் பந்து வீச்சு வீரர்களில் யார் அதிக விக்கட்டுக்களை பெறுவார்கள், பந்து தடுக்கும் வீரர்களில் யார் அதிக காட்ச் பிடிப் பார்கள் என ஆரம்பித்த சூதாட்டப் போட்டிகளில் அதிகளவான பணம் தாராளமாகப் புரள ஆரம்பித்ததும் சூதாட்டக்காரர்கள் தம் பேராசை காரணமாக கிரிக்கெட் மட்சின் முடிவுகளையே தீர்மானிப்பவர்களாக மாறினர்.

உண்மையிலேயே இத் தீய சக்திகள் மிகவும் சர்வசாதாரணமாக தமது கட்டுப்பாட்டை ஆரம்பித்தது 1980களில் ஷார்ஜாவில் நடந்த கிரிக்கெட் போட்டிகளிலேயே ஆகும். ஷார்ஜாவில் மிக அதிகளவில் போட்டிகளில் ஈடுபடும் இந்தியா, பாகிஸ்தான் ஆகிய நாடுகளே முதலில் இச் சூதாட்டங்களில் சிக்க ஆரம்பித்



தன. மத்திய கிழக்கு நாடுகளில் தொழில் வாய்ப்பிற்காகச் சென்ற பல்லாயிரக்கணக்கான இந்தியர்களும், பாகிஸ்தானியர்களும் நேரடியாக இச் சூதாட்டப் போட்டிகளில் பொழுது போக்கிற்காகவும் வருமானத்திற்காகவும் ஈடுபடத்தொடங்கினர். இது நாளடைவில் ஆசிய நாடுகளான இந்தியாவிலும், பாகிஸ்தானிலும் பெருமளவில் கோடிஸ்வர சூதாட்டக் காரர்களினால் பரவியது.

குறிப்பிட்டதோர் ஒரு நாள் சர்வதேசப் போட்டிக்காக கோடிக்கணக்கான டாலர்கள் சூதாட்டப்பந்தயத்தில் விளையாடும்பொழுது சூதாட்டத்தை நடத்துபவர்கள் சிறந்த கிரிக்கெட் வீரர்களுடன் முதலில் மறைமுகமாகவும் பின்னர் நேரடியாகவும் தொடர்பு கொண்டனர். மட்சின் முடிவையே மாற்றக்கூடியளவிற்கு பணம் தாராளமாக வீரர்களுக்கு வழங்கப்பட்டது.

உதாரணமாக இந்தியா- பாகிஸ்தான் மோதும் ஒரு போட்டியில் பாகிஸ்தான் வெல்லும் என மிக அதிகளவான பணம் பாகிஸ்தான் சார்பாக கட்டப்பட்டிருந்தால், சூதாட்டத்தை நடத்துபவர்கள் அவ்வளவு கோடி பணத்தையும் தாமே சம்பாதித்துக் கொள்வதற்காக பாகிஸ்தானின் தலைவர் சிறந்த துடுப்பாட்டக்காரர் போன்றவர்களுக்கு தமது லாபத்தில் ஒரு குறிப்பிட்ட சத வீதத்தை (இதில் 5 வீதம் ஏறத்தாழ லட்சக்கணக்கான டாலர்களாக இருக்கும்) வழங்கி, அவர்கள் தங்கள் திறமையைக் கைவிட்டு மோசமாக விளையாட வைப்பதால் விளையாட்டுப் போட்டியின் முடிவையே மாற்றித் தீர்மானிக்கின்றார்கள்.

இதனால் சாதாரணமான தேசப்பற்று மிக்க ரசிகர்கள் ஏமாற்றமும் வருத்தமும் அடைய சம்பந்தப்பட்ட வீரர்கள் தமது தேசத்தையே காட்டிக் கொடுத்துப் பணம் சம்பாதித்து கோடிஸ்வரர்களாகின்றனர்.

இத் தீய நோய் இன்று ஏனைய நாடுகளிற்கும் பரவி உலகம் முழுவதுமுள்ள கிரிக்கெட் ரசிகர்களை பெரும் விரக்திக்கு உள்ளாக்கியுள்ளது.

### சகுனியை மிஞ்சும் கிரிக்கெட் சூதாட்டக்காரர்கள்

மகா பாரதத்தில் தொடங்கிய சூதாட்டம், பாரதத்தில் இன்றும் கிரிக்கெட் விளையாட்டின் மூலம் தொடர்கதையாகின்றது. இந்திய துணைகண்டத்தின் கிரிக்கெட் அணித் தலைவராக 1980களில் திகழ்ந்தவரும், முதல் தடவையாக ஆசிய நாடொன்று உலக கோப்பையை வெற்றி பெறச் செய்த (1983இல்) இந்திய அணித் தலைவரும் .444 டெஸ்ட் விக்கெட்டுக்களைக் கைப்பற்றி உலகச் சாதனை படைத்தவருமான "பஞ்சாப் புலி" எனப்படும் கபில்தேவ் மீது மிகப் பிரமாண்டமான சூதாட்டப் புகாரை ஏவி விட்டுள்ளார் மனோஜ் பிரபாகர்.

1994ஆம் ஆண்டு இலங்கையில் நடந்த சிங்கர் வெற்றிக் கிண்ணத்துக்கான போட்டியில் மனோஜ் பிரபாகரை "விட்டுக்கொடுத்து" விளையாடுமாறு, கபில்தேவ் சூதாட்டக்காரர்கள் சார்பில் கேட்டுக்கொண்டதாகவும் அதற்குச் சமானமாக இந்திய ரூபா 25 இலட்சம் தருவதாகவும் [illegible] வழங்கப்பட்டுள்ளது.



இச் சுவையான சூதாட்டத்தைப் பற்றிய சூடான துணுக்குகள்

மனோஜ் பிரபாகர்:- கபில் எனக்கு 25 இலட்சம் ரூபா தருவதாக கூறிய பொழுது பறீலங்கா ஒபரோய் ஹோட்டலில் என்னுடன் நவோஜ் சிங் சிதுவும் இருந்தார். இவ்விடயமாக நான் கபிலிடம் கோபமாகச் சத்தம் போட்டு ஏசும் பொழுது அடுத்த அறையிலிருந்த வீரர்களான நயான் மொங்கியா, பிரசாந்த் வைதியா, ஆகியோர் ஓடோடி வந்தனர். இதனைத் தொடர்ந்து கபில் எனது அறையை விட்டு வேகமாக வெளியேறிவிட்டார்.

கபில்தேவ்:- என் தாய் நாட்டின் மீது சத்தியமாக இப்படி ஒரு விசயமே நடக்கவில்லை. பிரபாகர் பொய் சொல்லுகின்றார். இது சம்பந்தமாக பிரபாகர் மீது மான நஷ்ட வழக்கு தொடர ஏற்பாடு செய்துள்ளேன். நான் தாய்ப்பால் குடித்து வளர்ந்தவன். ஆட்டுப்பால் குடித்தவன் அல்ல. அவனுக்குத் தைரியம் இருந்தால் என்னுடன் நேருக்கு நேர் பேசட்டும்.

பிரபாகர்:- 1994 இல் இவ்வசம்பாவிதம் நடந்த உடனேயே நான் முன்னாள் இந்திய கிரிக்கெட் அணித் தலைவர்களான அஜித் வடேகர், சுனில் கவாஸ்கர், ரவி சாஸ்த்திரி ஆகியோரிடம் பறீலங்காவில் வைத்தே சொல்லி விட்டேன். ஆனால் அவர்கள் என்னை ஆட்டத்தில் கவனம் செலுத்துமாறும் மேலும் சம்பந்தப்பட்ட நிர்வாகிகளிடம் புகார் சொல்லுமாறும் கேட்டுக் கொண்டனர்.

ஆனால் மனோஜ். இதைப்பற்றி தன்னிடம் எதுவுமே கூறவில்லை என இந்திய அணியின் பயிற்சியாளர் அஜித் வடேகர் கூறியுள்ளார்.

அத்துடன் சுனில் கவாஸ்காரும் இதுவரை எதுவுமே பேசவில்லை முகமது அசாருதீன், நயான் மொங்கியா, அஜேய் ஜடேஜா போன்ற வீரர்கள் தற்சமயம் ஆசிய கிண்ணத்திற்கான போட்டிகளிற்காக டாக்காவில் இருப்பதனால் அவர்களும் ஏதும் கூறவில்லை.

ஆயினும் மனோஜ் பிரபாகரிடம் புகாரைப் பதிவு செய்து தொடர்ந்து இதற்கு ஒரு முடிவுகட்ட இந்திய பொலிசார் சி.பி.ஐ முன் வரவேண்டுமென இந்திய கிரிக்கெட் சங்கத்தின் தலைவர் ஏ.சி. முத்தையா கூறியுள்ளார். இந்த விசாரணை முடிவு எப்படி அமையும் என்பதை இந்தியாவில் மட்டுமல்ல உலக கிரிக்கெட் ரசிகர்கள் அனைவருமே காத்திருக்கின்றனர்.

இத்தகைய மனதை நோகடிக்கும் பிரச்சினைகளுக்கு மத்தியில் இன்னுமொரு நெஞ்சை நெகிழவைக்கும் விடயம் மேற்கிந்திய தீவுகள் அணியின் வேகப்பந்து வீச்சாளரான கோர்ட்னி அம்புரோஸ் இங்கிலாந்துக்கு எதிரான போட்டிகளின் பின்னர் ஓய்வு பெறப் போவதாகவும் கூறியுள்ளார். இதுவரை 13 வருடங்களாக 388 விக்கெட்டுக்களை பெற்ற அம்புரோஸ் இங்கிலாந்துப் போட்டிகளில் மேலும் 12விக்கெட்டுக்களை பெற்று உலகத்திலேயே 400 விக்கெட்டுக்களைப் பெற்ற மூவரான கோர்ட்னிவால்ஷ், கபில்தேவ், ரிச்சார்ட் ஹார்ட்லி ஆகியோருடன் நால்வராக ஆவார் என எதிர்பார்க்கப்படுகின்றது. இக் கூட்டணி மிக விரைவில் பாகிஸ்தான் வீரர் வாசிம் அக்ரத்துடன் (இதுவரை 396விக்கெட்டுக்கள்) ஐவராவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது. ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணம் சூழ்ந்து........

12ம் பக்கம் தொடர்ச்சி

இல்லாவிடில் தற்போதைய சூழ் நிலை மாபெரும் அழிவுக்கும், பழிவாங்கல் நடவடிக்கைகளுக்குமே வழிவகுக்கும்.

அரசின் தரப்பிலோ பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கான முயற்சிகள் மிக நீண்ட காலத்திற்கு தாமதப்பட்டுள்ளன என்றே கருதவேண்டியிருக்கிறது.

யுத்தத்தை மிஞ்சிய முக்கியத்துவம் அரசியல் தீர்வுக்கு கொடுக்காதது தூரதிஷ்டமானதாகும். ஒரு இன முரண்பாட்டுச் சிக்கலுக்குத் தீர்வுக்காணப்படாமல் குறிப்பிட்ட பகுதியில் இராணுவப் பிரசன்னத்தை நீண்ட நாட்களுக்கு வைத்திருப்பதும்,

இராணுவத் தீர்வை ஏற்படுத்த முனைவதும் எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்தும் என்பதே உலக சரித்திரம். நியாயங்களை, உண்மைகளை அத்திவாரமாக்காமல் எந்தவொரு சண்டையிலும் வெற்றி காணமுடியாது. எனவே அரசியல் தீர்வும் இக்காலக் கட்டத்தில் மிகுந்த முக்கியத்துவம் பெறுகிறது.

பௌத்த சிங்களப் பெருமிதத்தில் ஊறித்திளைத்த ஆங்கிலப் பத்திரிகைகள் இந்தியாவிடம் உதவிக் கோரப்பட வேண்டும், இலங்கை இந்திய ஒப்பந்தத்திலும் அதற்கான வழிவகைகள் உள்ளன. ஆயுத தளபாடங்கள் மற்றும் அவை மட்டுப்படுத்தப்பட்ட உதவிகளாகவும் இருக்கலாம் என தெரிவித்துள்ளன. ஆனால் அத்தகைய உதவிகளை பெறும் காலம் கடந்து விட்டதாகவே எண்ணத் தோன்றுகிறது.

ஆனால் இந்தியாவின் உதவி கிடைக்காத பட்சத்தில் பாகிஸ்தான், சீனா, மேற்கு நாடுகளிடமும், அமெரிக்கா, இஸ்ரேல் போன்ற நாடுகளிடமும் உதவிக் கோரலாம் என எழுத்துக்கள் தாறுமாறாக இருக்கின்றன. அவர்களுடைய வன்மங்களும் தாழ்வுச் சிக்கல்களும் இதில் பிரதிபலிக்கின்றன.

நோர்வேயின் அனுசரணையைப் புறந்தள்ளத் தேவையில்லை அதனை வைத்துக் கொண்டு இந்தியாவின் ஆதரவைப் பெற வேண்டும்.

இந்தியாவின் தலையீட்டை எதிர்த்தவர்கள் இந்தியா மீது காறி உமிழ்ந்தவர்கள் இன்று இந்தியாவின் உதவியை வாய்விட்டு கேட்பதுதான் வரலாற்று விநோதம்.

இலங்கையின் சகல இன மக்களின் நலன்கள் தொடர்பாகவும் ஒரு திருப்திகரமான போக்கை கடைபிடிக்கக் கூடிய நாடு இந்தியா எனினும் யுத்தத்தில் ஏற்பட்ட பின்னடைவுகளுக்குத்தான் இந்தியா வேண்டுமே தவிர அதிகாரப் பரவலாக்கலுக்கோ அல்லது இந்த நாட்டின் தேசிய இனங்களின் தேவைகளுக்கோ இந்தியா வேண்டாம் என்ற பரந்த நோக்கில்லாத இனவாத அணுகுமுறைகள் தோல்வியடையலாம்.

எனவே அதிகாரப் பரவலாக்கல் அதன் மூலம் தமிழ் மக்களின் அபிலாஷைகளை பூர்த்தி செய்வதும் ஜனநாயகத்தை வடக்கு கிழக்கில் உறுதிப்படுத்துவதும், யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவருவது எல்லாமே ஒன்றோடு ஒன்று பின்னப்பட்ட விடயங்கள். மற்றவர்களின் ஜனநாயகத்தை அங்கீகரிக்காமல், மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிக்காமல், சர்வதேச ஆதரவில்லாமல், எதுவித பிரமிப்பை ஏற்படுத்தினாலும் புலிகள் தமது நோக்கங்களை நிறைவேற்ற முடியாது.

அது கால வர்த்தமானங்களுக்கு பொருத்தமற்றது. கண்கெட்டப்பின் சூரிய நமஸ்காரம் செய்வதுபோல் அபாய எல்லைகளை தாண்டிய பிறகு அரைகுறையாக விடயங்களை முடிக்க முடியாது.

யாழ்ப்பாணம் படையினரின் பொறிக்கிடங்காகவும், பேரினவாத எழுச்சியின் குவிமையமாகவும், ஜனநாயகம் மறுக்கப்பட்ட மக்களின் கொலைக்களமாகவும், சர்வதேச வன்முறை ஏற்றுமதியின் தாயகமாகவும் இருக்கப் போகும் சாத்தியத்தை மறுத்துவிட முடியாது.

### பிற்குறிப்பு

இக் கட்டுரையில் எவற்றை நாம் குறிப்பிட்டோமோ அவை ஓரளவு நிகழ்ந்துள்ளன. பல்வேறு சக்திகள் இலங்கையில் கவனம் செலுத்துகின்றன. கொசோவா, பொஸ்னியா பிரச்சினைகள் போன்று இந்நாட்டின் பிரச்சினைகளும் சர்வதேச முக்கியத்துவத்தைப் பெற்றுள்ளன.

எது எப்படியிருப்பினும் இலங்கை பிரச்சினையில் இந்தியாவின் பங்களிப்பு தவிர்க்க முடியாததும், பிரதானமானதுமாகும். இந்தியாவின் பங்களிப்புடனேயே ஆக்கப்பூர்வமான முறையில் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணமுடியும். ●

## குறுக்கெழுத்துப் போட்டி - 04

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | ★ | 7 | 8 | 9 | 10 |
| 11 | ★ | 13 | ★ | 15 | 16 | 17 | 18 | 19 | 20 |
| 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | ★ |
| 31 | 32 | 33 | 34 | ★ | 36 | 37 | 38 | 39 | 40 |
| 41 | 42 | 43 | 44 | 45 | 46 | 47 | ★ | 49 | 50 |
| ★ | 52 | 53 | 54 | 55 | 56 | ★ | 58 | 59 | 60 |
| 61 | 62 | ★ | ★ | 65 | 66 | 67 | 68 | 69 | 70 |
| 71 | ★ | 73 | 74 | 75 | 76 | 77 | 78 | ★ | ★ |
| 81 | 82 | 83 | 84 | 85 | ★ | 87 | 88 | 89 | 90 |
| 91 | 92 | 93 | 94 | 95 | 96 | ★ | 98 | 99 | 100 |

### இடமிருந்து வலம்

1. கொலம்பஸ் கண்டுபிடித்த கண்டம்.
7. வால்மீகி சமஸ்கிருதத்தில் எழுதியதை தமிழில் எழுதியவர். (குழம்பியுள்ளது)
15. ஆடிய பாதம் இங்குதான் இருக்கிறார். (குழம்பியுள்ளது)
21. சொந்த நாட்டை, ஊரைவிட்டு இடம் பெயர்ந்தோரை இப்படியும் அழைப்பர்.
31. நகைச்சுவை உணர்வை இவ்வாறும் அர்த்தப்படுத்திக் கொள்ளலாம்.
41. கடைகளில் பொருட்கள் வாங்கியதன் பின்னர் சிலர் இதனைப்பெறுவர். (குழம்பியுள்ளது)
52. நுளம்புத் தொல்லையைக் கட்டுப்படுத்த வீடுகளில் இதனை உபயோகிப்பர்.
58. அர்ச்சுனன் துரோணர் மீது தொடுத்தது.
61. அநேகமான விண்ணப்பப் படிவங்களில் இந்தச் சொல்லுக்கும் இடைவெளி இருக்கும்.
73. இவை இருந்தால் தீர்த்தங்களும் இருக்கும். மூர்த்திகளும் இருக்கும். (குழம்பியுள்ளது)
91. இதனை ஒரு இதிகாசமாகக் கொள்வர்.

### மேலிருந்து கீழ்

1. சிங்கள சிறுகதைகளில் இடம்பெறும் ஒரு ஜனரஞ்சகமான ஆளின் பெயர்.
3. பழங்குடை சொன்னதன் கதை. (குழம்பியுள்ளது)
22. இத்தாலியைச் சேர்ந்த பிரபலமான கடலோடி(குழம்பியுள்ளது)
8. சுப காரியங்களோ, துக்க நிகழ்வுகளோ இதைக் கட்டுவது சமயப் பாரம்பரியங்களில் ஒன்று.(குழம்பியுள்ளது)
9. மழையின் இறைவன் (குழம்பியுள்ளது)
40. கல்லாத மனிதனை இவ்வாறு அழைப்பர்.
45. உலக கிண்ணத்தைப் பெற்ற கிரிக்கட் வீரரின் பெயரின் பகுதி. (குழம்பியுள்ளது)
58. மனிதனுக்கு ஆலயத்தில் கிடைப்பது. (குழம்பியுள்ளது)
61. பஞ்ச பூதங்களில் ஒன்று.
67. இது உள்ளவர்களை அறிவு ஜீவிகள் என்பர்.

போட்டி இல:03 இல் சரியான விடை எழுதிப் பரிசு பெறும் அதிஷ்ட சாலி:-

**மா. செல்லத்துரை**
**இல: 90, வித்தியாலயம் வீதி,**
**திருகோணமலை.**

(இவருக்கான பரிசுத் தொகை அனுப்பி வைக்கப்படும்)

பாராட்டு பெறுவோர்:

1. எஸ். ஜெயச்சந்திரரா ஜயா
இராஜேந்திரங்குளம், வவுனியா.
2. எஸ். எல். சில்மியா
இல: 42, மக்காமடி றோட், ஏறாவூர்-03
3. கே. தயாளநாதன்
உமா மில் றோட், செங்கலடி.
4. எஸ். கெனடி
வங்காலை, மன்னார்.
5. க. செல்வநாயகம்
இல: 54 கண்டி வீதி, நுவரேலியா.

CROSS WORD NO:04
KANNOTTAM
37/2, 1/1 Wimalasara Rd,
Kalubowila, Dehiwala.

### குறுக்கெழுத்துப்போட்டி 03க்கான சரியான விடைகள்

#### இடமிருந்து வலம்

| | |
|---|---|
| 1. யுத்த நிறுத்தம் | 37. முத்தம் |
| 9. ஆனந்தம் | 44. திதி |
| 15. கனி | 49. காணிக்கை |
| 22. அமைதி | 54. விதவை |
| 26. சித்திரம் | 57. கைராசி |
| 33. தவம் | 62. அம்மா |

#### மேலிருந்து கீழ்

| | |
|---|---|
| 1. ஆயுள் | 33. தணிக்கை |
| 2. தத்துவம் | 39. விரதம் |
| 3. தந்திரம் | 40. தையாதம் |
| 4. நிம்மதி | 44. கைதி |
| 7. தனிமை | 50. ராணி |
| 8. அகம் | 51. காசி |
| 22. சித்தி | 54. அவை |
| 29. முத்தி | |

கீழுள்ள முகவரிக்கூப்பனை வெட்டி ஒட்டி தபாலட்டையில் மாத்திரமே எழுதி எதிர்வரும் 30ம் திகதிக்குள் அனுப்பி வையுங்கள்.

சரியான விடைகளை எழுதிப் பரிசு பெறும் அதிஷ்டசாலிக்கு ரூபா 200 அனுப்பி வைக்கப்படும். ஐந்து பேர் பாராட்டுப்பெற தேர்ந்தெடுக்கப்படுவர்.

# தமிழக முதல்வரின் நிலைப்பாடு நியாயமானதே

இலங்கையில் இனவிரிசல் உச்சக்கட்டத்தை அடைந்த 1983களில் பல இளைஞர்கள் இந்தியாவிற்கு ஆயுதப்பயிற்சிக்காக சென்ற காலகட்டத்தில் தமிழ் நாட்டில் பல இடங்களில் முகாம் அமைத்துச் செயற்பட்டுவந்தனர். அந்நாட்களில் அந்த இளைஞர்களுக்கு தங்குவதற்கான இடம் முதல் சகல அடிப்படைத் தேவைகளையும் தமிழ்நாட்டு மக்களின் உதவியுடன் அங்குள்ள பெரியவர்கள், அரசியல் சார்புடையோர், தமிழர் நலன்விரும்பிகள் செய்துகொடுத்தனர்.

இலங்கையில் தமிழர் பிரச்சினை தொடர்பாகவும் தமிழ் பேசும் மக்களின் உரிமைகள் தொடர்பாகவும் பட்டி தொட்டியெல்லாம் சென்று பிரச்சாரம் செய்வதற்கு சகல உதவிகளையும் செய்வதற்கு அவர்கள் தயங்கியதில்லை.

தமிழர்பிரச்சினை தொடர்பாக அன்றைய காலகட்டங்களில் தமிழ்நாட்டில் இருந்த எழுச்சியை நினைத்து நாம் பெருமைப்படும் அளவிற்கு பலவகைப் போராட்டங்கள் நடைபெற்றன. அன்று தமிழ் நெஞ்சங்கள் கொதித்தன. இலங்கைத்தமிழர்களை தங்கள் உடன்பிறவா சகோதரர்களாகப் பார்த்தார்கள். சென்ற இடமெல்லாம் உபசரிப்புக்கள், வரவேற்புக்கள் அன்றைய காலகட்டம் இலங்கைத் தமிழர்களுக்கு தமிழ் நாட்டில் பொற்காலமாகும். வீராப்புடன் நெஞ்சை உயர்த்தி நடந்த காலமாகும். இவை எல்லாவற்றையும் சின்னாபின்னமாக்கி தமிழ்நாட்டில் தலைகுனியுமளவிற்கு நிலமையை ஏற்படுத்திய பெருமை இலங்கைத் தமிழனால் தான் ஏற்பட்டது.

தமிழ்நாட்டில் இலங்கைத்தமிழர் இளைஞர்கள் பல இடங்களில் வாழ்ந்து வந்த போதும் அவர்களுக்குள் அன்றைய காலகட்டத்திலேயே ஒற்றுமையின்மை நிலவியது. போட்டி, பொறாமை இருந்துவந்ததென்பதற்கு தமிழ்நாட்டில் நடைபெற்ற பல சம்பவங்கள் சான்றாகவுள்ளது.

தமிழ்நாட்டுத்தலைவர்கள் அந்நாட்களில் வலியுறுத்திவந்த விடயம் "ஒற்றுமைப்படுங்கள்! ஒற்றுமைப்படுங்கள் என்பதே! அது இன்று வரை நடைபெற்றதா? இல்லை! இதனால் பல வகையிலும் உதவிய தலைவர்கள் நொந்தார்கள், வேதனைப்பட்டார்கள்.

ஒற்றுமையை வலியுறுத்தும் போதெல்லாம் எங்கேயோ ஈழத்தின் ஒரு மூலையில் ஒரு போராளியை இன்னுமொரு போராளி கொலை செய்தவண்ணமே இருப்பான். இப்படித்தான் தமிழீழ ஆதரவாளர்கள் அமைப்பு (TESO) மதுரையில் பிரமாண்டமான கூட்டம் ஒன்றை நடாத்திக் கொண்டிருக்கும் போது சிறிசபாரெத்தினம் கொல்லப்பட்ட செய்தி கலைஞர் கருணாநிதி அவர்கட்கு கிடைக்கிறது. வேதனைப்பட்டார் புலிகளைக் கண்டித்தார்.

அவர் ஈழத்து இளைஞர்களில் எவ்வளவு அன்பும், பாசமும் வைத்துள்ளார் என்பதை அவரது கட்சியின் ஏடான முரசொலியில் கலைஞரின் கடி[illegible]

தமிழ்நாட்டில் [illegible] குற்றங்களிலும் ஈடுபடத்தொடங்கினார்கள். இதனால் தமிழக பொலிசுக்கு பல சிக்கல்களை ஏற்படுத்தினார்கள்.

ராஜீவ் காந்தியைக் கொலை செய்த நாள் முதல் இலங்கைத் தமிழர்கள் மேல் இருந்த பாசமும் பற்றும் முற்றாக மாறியது. இலங்கைத்தமிழர்கள் முகாம்களில் அடைக்கப்பட்டனர். சிறைச்சாலைகளில் அடைக்கப்பட்டனர். கட்டாயமாக பொலிசில் பதிய வேண்டும் என்ற நிலை ஏற்பட்டது. இலங்கைத் தமிழர்கள் மேல் கழுகுப்பார்வை ஏற்பட்டு சந்தேகப்பிராணி ஆக்கப்பட்டார்கள்.

இதற்கு முன்னர் சென்னையில் பத்மநாபா அவர்கள் கொலை செய்யப்பட்டார். இதனால் பல அரச அதிகாரிகள் மந்திரிகள், பொலிசார் விசாரிக்கப்பட்டார்கள். கலைஞரின் ஆட்சியும் பறிபோனது. இவற்றையெல்லாம் மனதிற் கொண்ட தமிழகத்தலைவர்கள் உதவி செய்து உபத்திரத்தை ஏன் தேடுவான் என இலங்கைத்தமிழர் பிரச்சினையில் இருந்து ஒதுங்கிக் கொண்டார்கள்.

இன்று நாட்டில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் யுத்தம் வேகமடைந்து பலர் மாண்டுகொண்டிருக்கையில் தமிழக மக்கள் முன்னரைப் போல் எதிர்ப்பு உணர்வுகளைக் காண்பிக்காமல் இருப்பது கவலையையும் வேதனையையும் தரும் விடயமாக இருப்பினும் எம்மவர்கள் செய்த காரியங்களாலேயே இன்று அவர்கள் அப்படி உள்ளார்கள் என்பதையும் நாம் உணர்வோம்.

-பாமரன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணோட்டம்

"நாம் மக்களுக்காகப் போராடுவதென்பது எம்மீது சுமத்தப்பட்ட கடமையே தவிர எமக்கு வழங்கப்பட்ட அதிகாரமல்ல"

No 37/2 - 1/1, Wimalasara Road, Kalubowila, Dehiwala


## இந்தியாவின் நிலைப்பாடு

இந்து சமுத்திரப் பிராந்தியத்தின் முக்கிய சக்தியாக விளங்கும் இந்தியாவின் உதவியுடனேயே இனப்பிரச்சினைக்கு ஆக்கப்பூர்வமானதும் நிரந்தரமானதுமான தீர்வைக் காணமுடியும் என்பது பரவலாக ஏற்றுக் கொள்ளப்பட்ட விடயமாகும்.

அந்த வகையில் தற்போது 1987 இல் இலங்கை-இந்திய ஒப்பந்த்தின் அடிப்படையில் வழங்கப்பட்ட அதிகாரங்களை விட கூடிய அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும். அவ்வாறு அதிகாரங்கள் வழங்கப்படுவதற்கூடாகவே நாட்டின் ஒருமைப்பாடும், ஐக்கியமும் பாதுகாக்கப்படும் என்றும் இந்தியா தெரிவித்துள்ளது. மேலும் சமாதான வழிகளில் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கு இந்தியா உதவத்தயாராக இருப்பதாகவும் தெளிவாகத் தெரிவித்துள்ளது.

குறிப்பாக மூன்று விடயங்கள் இந்தியாவால் குறிப்பிடப்பட்டுள்ளன. மனிதாபிமான ரீதியான உதவி, நியாயமான அளவில் அதிகாரங்களை பகிர்ந்தளிப்பது, சமாதானத்தை உருவாக்குவது.

இந்தியாவின் அழிவுவழியற்ற ஆக்கபூர்வமான இந்த யோசனைகளைப்பற்றி நம் நாட்டு அரசியல் தலைவர்கள் சிந்திக்க வேண்டும். இந்தியா வேறு உதவிகளை செய்யவில்லையே என்று குறைப்பட்டுக் கொள்வதில் எதுவித அர்த்தமோ, பிரயோசனமோ இருப்பதாகத் தெரியவில்லை.

இந்தியா உத்தியோக பூர்வமான முறையில் தெரிவித்திருக்கும் விடயங்கள் தொடர்பாக இலங்கையே உத்தியோகபூர்வமான தனது நிலைப்பாட்டை முன் வைக்க வேண்டும். இந்தியாவின் நல்லெண்ண சமிக்ஞையை இலங்கை பற்றிக் கொள்ள வேண்டும்.

ஏனைய சகல நாடுகளையும்விட எமது பிரச்சினையில் உதவுவதற்கு இந்தியாவிற்கு நிறையவே அருகதை உண்டு. பெருமளவு தமிழர்கள் பேரினவாத இன வன்முறைகளின் போது உடனடியாக அடைக்கலம் புகுந்த நாடு இந்தியா.

இலங்கைக்கும் இந்தியாவிற்கும் பாரம்பரிய கலாச்சார மொழி மத ரீதியான உறவுகள் உண்டு. இங்கு நிகழும் தீவிர இராணுவ அரசியல் மாற்றங்கள் இந்தியாவை பாதிக்கவே செய்யும்.

அது மாத்திரமல்ல. இலங்கை-இந்திய ஒப்பந்தத்தின் அடிப்படையில் இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் முயற்சியில் பங்களிப்பை செய்த சுமார் 1500 இற்கும் மேற்பட்ட இந்திய அமைதி காக்கும்படை வீரர்கள் பலியானார்கள். ஆனால் இவர்களின் இழப்பைப் பற்றி இலங்கையின் அரசியல் தலைவர்கள் எவரும் எப்போதும் வருத்தம் தெரிவித்தது கிடையாது.


இலங்கையின் இனப்பிரச்சினையின் விளைவாக இந்தியா உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் பல சிக்கல்களுக்கு முகம் கொடுத்த நாடு. எப்போதும் ஐக்கிய இலங்கைக்குள் ஆக்கபூர்வமான தீர்வை இந்தியா வலியுறுத்தி வந்திருக்கிறது.

எல்லா வகையிலும் இனப்பிரச்சினை தீர்வு விடயத்தில் உதவும் நாடுகளில் இந்தியாவே முதன்மை ஸ்தானத்தை வகிக்க வேண்டியது.

அந்தப் பாத்திரத்தை இலங்கையின் சகல அரசியல் சக்திகளும் அங்கீகரிப்பதனூடாகவே இலங்கையில் ரத்தம் சிந்துதலை முடிவுக்குக் கொண்டு வந்து ஐக்கியப்பட்ட இலங்கைக்குள் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு நியாயமான தீர்வை எட்ட முடியும்.

அதற்குச் சமாதான நல்லெண்ண நோக்கங்களை கொண்ட நோர்வே போன்ற நாடுகளின் முயற்சிகளும் ஐ.நா வின் உதவிகளும் ஆதரவும் பேணப்படல் வேண்டும்.

## யாழ்ப்பாணம் சூழ்ந்துவரும் அபாயம்




யாழ் குடா நாட்டில் ஏற்பட்டிருக்கும் நெருக்கடி மிகப்பாரதூரமானதாகும். மக்களுடைய நிலையிலிருந்து இன்று அவதானிக்கும் போதும் அவர்கள் பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலை.

1995இல் பாரிய இடம் பெயர்வையும் உடமை அழிவு, உயிரிழப்புக்களையும், சந்தித்த மக்கள், மீண்டும் மீண்டும் நெருக்கடியை எதிர்நோக்குகிறார்கள். ஏற்கனவே நடந்த இடம் பெயர்வு அழிவுகளிலிருந்து இன்னும் மக்கள் மீளவில்லை.

ஆனால், இப்போது புதிய நெருக்கடி உருவாகியுள்ளது. இது எமது மக்களை மேலும், உடல் ரீதியாகவும், உளரீதியாகவும் பலவீனப்படுத்தவே செய்யும். யுத்தத்திற்கு ஆட்களை வழங்கும் சக்கை பிழியப்பட்ட சமூகமாகவே எமது சமூகம் பலவீனப்பட்டிருக்கிறது.

ஏற்கனவே 1995, சூரியக்கதிர் நடவடிக்கையின் போது மக்கள் ஒரேயடியாக தென்மராட்சிக்கு சென்றிருந்ததால் உயிர்ச்சேதம் குறைவாக இருந்தது. ஆனால் தற்போது பீரங்கிகள் இருதரப்பாலும் பாவிக்கப்படும் சூழ்நிலையில் முன்னர் வடக்கிலிருந்து தெற்கு நோக்கியே இடம் பெயர்ந்தார்கள்.

தற்போது வலிகாமத்தினுள் மக்கள் தொகை அதிகரிக்கிறது. யாழ்குடா நாட்டினுள் பெரிய படைத்தளமான பலாலி இராணுவமுகாம் வலிகாமத்தினுள் இருப்பதனால் உயிர்ச்சேதம் பெருமளவு நிகழ்வதற்கான சாத்தியங்கள் உண்டு.

. புலிகளுக்கு மாற்றான அபிப்பிராயம் கொண்டவர்கள். அதிருப்தியை வெளியிட்டோர், மாற்று அரசியல் கட்சிகளுடன் தொடர்பு கொண்டோர் பாதிக்கப்படும் நிலைமையும் உண்டு. உள்ளுராட்சி சபை, ஜனாதிபதி தேர்தல்களில் மாற்றுக் கருத்துக் கொண்டவர்களுக்கு வாக்களித்ததும் உண்மை. இவர்கள் பழிவாங்கப்படுவதற்கான நிலைமைகள் அதிகரித்துள்ளன. இவை பற்றி மனித உரிமை ஸ்தாபனங்களும் சர்வதேச ஸ்தாபனங்களும் தீவிர அக்கறை செலுத்த வேண்டிய காலமிது.

இது விடயத்தில் உள்ளூர் ஜனநாயக சக்திகளும், மனித உரிமை அமைப்புக்களும், அரசும் அக்கறைச் செலுத்த வேண்டும். ஏனெனில் ஆயிரக் கணக்கான மக்கள் உயிராபத்தை எதிர் நோக்குகின்றார்கள். உணர்ச்சிகரமான நிலைமை இன்னுமொரு தலைமுறையினரை யுத்தத்தில் ஈடுபடுத்துவதற்கான நிலைமைகளைத் தோற்றுவிக்கலாம்.

யாழ்ப்பாண மக்களின் அபிப்பிராயங்கள் சுயாதீனமாக வெளிப்படுத்துவதற்கான நிலமைகள் உருவாக்கப்பட வேண்டும். அதற்கு ஒரு சர்வதேச உத்தரவாதமும் பெறப்பட வேண்டும்.


மொத்தப் பிரச்சினைக்குமே மக்களின் பெரும்பான்மையோரின் விருப்பத்தை கருத்திற்கெடுத்த நம்பகரமான ஒரு சக்தி ஒன்றின் தலையீடு அவசரமாக தேவைப்படுகிறதென்பதே உண்மையாகும்.

தொடர்ச்சி 11ம் பக்கம்

## மட்டக்களப்பு
## வைகாசி விசாகத்து குண்டு தாக்குதல்

புத்தபகவான் பரிநிர்வாணமடைந்த வைகாசி விசாகத்தில் மட்டக்களப்பில் போதிமரத்தின் இலைகள் சிவப்பாய் மாறின. அதன் கீழே குற்றுயிரும்





குறைஉயிருமாக மனிதத்தின் அவலக்குரல் எழுந்தது. பலர் உடல் சிதறி அந்த இடத்திலேயே மௌனித்துப் போயினர். அநாதை விடுதியின் குழந்தைகளும் இதில் அடக்கம்.

ஆம்! புத்தாயிரத்தின் முதலாவது வெசாக் தினத்தில் ஏதுமறியாத அப்பாவிகளாக ஆன்மீக தே[illegible] மனிதர்கள் மட்டக்களப்பு விகாரையில் கூடினார்கள். வெளிச்சக் கூடுகளையும் வெண்ண விளக்குகளையும் காணும் கனவுடன் ஆயித்தியமலை அநாதை இல்லத்திலிருந்து பங்கு தந்தையான போதகர் ஒருவருடன் வந்த தாய் தந்தையர், உற்ற சுற்றங்கள் இல்லாத பாலகர்களின் குழந்தைகள் இரத்தச் சேற்றில் மூழ்கடிக்கப்பட்டனர். ஒன்பது குழந்தைகள் கொல்லப்பட்டார்கள். 23பேர் சாதாரண பொது மக்கள். தாம் அன்று மரணிப்போம் என்று கனவிலும் நினைத்திருக்கமாட்டார்கள். 78 பேர் குற்றுயிரும் குறைஉயிருமாக நரக வேதனையை அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

இத் தாக்குதலை மட்டக்களப்பு திருமலை மறை மாவட்ட ஆயர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை அவர்கள் வன்மையாக கண்டித்துள்ளார்கள். ஆனால் பல மனித உரிமை வாதிகள் தீக்கோழிகள் போல மண்ணில் தலையைப் புதைத்துள்ளார்கள்.

இத்தாக்குதலை மேற்கொண்டவர்கள் சாதாரண பொதுமக்களைப் பற்றி என்ன நினைக்கிறார்கள் என்பதுதான் இங்கு பயங்கரமானது. மனிதர்கள் கூடும் இடங்களில். ஆன்மீக வழிபாட்டிடங்களில் உடல் சிதறி மரணிக்கும் பெருங்கேட்டை இவர்கள் தெரிந்துகொண்டே விளைவிக்கிறார்கள்.

ஒரு மத வழிபாட்டிடத்தில் மேற்கொள்ளப்படும் தாக்குதல் ஏற்படுத்தும், இனவாத தீச்சுவாலை, அதில் பல ஆயிரம் மனிதர்களுக்கு நேரும் உயிர் இழப்புக்கள், சொத்து இழப்புக்கள், பொருளாதார அழிவுகள், அகதி வாழ்வு இவற்றில் தமது குறுகிய அரசியல், இராணுவ, நலன்களை நிறைவேற்றவே இவர்கள் முனைகிறார்கள். அதற்காகவே இந்தக் குரூரத்தனமான தாக்குதலை மேற்கொண்டார்கள் மற்றவர்களின் கீழ்த்தர

தொடர்ச்சி 05ம் பக்கம்

தி. சிறிதரன் 37/2,1/1 விமலசாரா றோட், களுபோவில, தெகிவளை. அவர்களால் இரத்திரனப்பிட்டிய C.R.C PRESS அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org